# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்




வெளியிடுவோர்

காங்கயம் கிறிஸ்துவின் சபையார்

தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701

நீங்கள் ஈரோட்டில் இருக்க நேர்ந்தால் கீழ்க்கண்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு கர்த்தருடைய பிள்ளைகளோடு சேர்ந்து ஆராதியுங்கள்.

இடம் :- 2, மணல்மேடு வீதி, ஈரோடு - 638 002.
(ரயில் குட்செட் சமீபம்)

## நாளும் நடப்பும்

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு | காலை | 9.30 - 11.00 | காலை ஆராதனை |
| ஞாயிறு | பகல் | 11.00 - 12.00 | ஞாயிறு பள்ளி |
| ஞாயிறு | மாலை | 5.30 - 6.30 | திருமறை ஆய்வு & கலந்துரையாடல் |
| வியாழன் | மாலை | 7.15 - 8.30 | வேத ஆய்வுவகுப்புகள் |
| வெள்ளி | மாலை | 7.00 - 9.00 | ஜெப ஆராதனை |

## இதழின் உள்ளே


சம்மா 1

கடைசி நாட்கள் 6

கிறிஸ்தவப் பிள்ளை வளர்ப்பு 9

சபையின் ஆளுகை அமைப்பு 12

விசுவாசம் மட்டும் போதும் என போதிப்பது யார் 17

சோதனையை வெற்றி கொள் 19

கருணைக் கண்கள் 24

THIRUMARAI AASAAN

Editor :
E.Z.S. RAJANAYAGAM

Honorary Editor
J.C. CHOATE

Published by Church of Christ
Dharapuram Road, KANGAYAM - 638 701 Tamilnadu, India
Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 7 AUGUST 1994 Issue - 8

# ஆசிரியவுரை

## "சம்மா" (Shammah)

பிரபலமானவர்களைப் பற்றிப் பேசினால் தான், எழுதினால் தான் அநேகருக்கு இனிக்கிறது. ஆவலோடு கேட்கவும், விருப்பத்தோடு படிக்கவும் செய்கிறார்கள். அவர்கள் எந்தத் துறையைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் இது தான் நியதி. ஒருவேளை அவர்களின் மறுபக்கம் எப்படியிருந்தாலும் அவர்களை நாம் ஏற்றுக் கொள்ளப் பழகி விட்டோம். வேதாகமத்திற்கு வரும் போதும் நாம் அதே பாணியைத்தான் பின்பற்ற விரும்புகிறோம். ஆனால் பரிசுத்த வேதாகமம் அற்பமானவையாக இருந்தாலும் கூட, அதனிடமிருந்தும் பாடம் கற்றுக் கொள்ள முடியும் என்று சொல்கிறது. (நீதி 30:24-28)

ஊர், பேர் தெரியாத இந்த "சம்மாவை" நான் ஏன் இம்மாதத்திற்கான செய்தியாகத் தெரிந்து கொண்டேனென்பதை இந்நேரம் விளங்கியிருப்பீர்கள். இந்த மனிதனுடைய பெயரை "எங்கேயோ" கேட்ட மாதிரி கூட அநேகருக்கு இருக்காது. இந்தப் பெயரை உடைய ஒருவன் வேதாகமத்தில் இருக்கிறானா என்று கூட நீங்கள் யோசிக்கக் கூடும். II சாமுவேல் 23:11,12 ஆகிய வசனங்களில் நாம் இவனைக் காணமுடியும். இவனுடைய பின்னணியைப் பற்றி பெரிதாக ஒன்றும் நமக்குச் சொல்லப்படவில்லை. ஆகேயின் குமாரனென்றும் ஆராரியன் என்று மட்டும் நமக்குத் தெரியும் (வ. 11) அடுத்து, தாவீதுக்கிருந்த வீரம் செறிந்த, நெஞ்சுரம் வாய்ந்த மூன்று பராக்கிரமசாலிகளில் இவனும் ஒருவன் (23: 8-11)

சரி, இந்த "சம்மா"வைப் பற்றி சொல்லப்பட்டிருக்கின்ற சம்பவத்தின் பின்னணியைப் பார்த்து விட்டு, இந்த புதியவன் மூலம் நாம் கற்றுக் கொள்ள வேண்டிய பாடங்களுக்குச் செல்வோம்.

நம்முடைய இரட்சகராகிய இயேசுக் கிறிஸ்துவுக்கு, சுமார் 1000 ஆண்டுகளுக்கு முன் நடந்துள்ளது இச்சம்பவம். குறிப்பாக, தாவீது அரசனுடைய இராஜ்யபாரத்தின் காலத்திலும், அதிலும் குறிப்பாக, இஸ்ரவேலர் பெலிஸ்தரோடு யுத்தம் நடத்தின நாட்களிலும் நிகழ்ந்துள்ளது.

ஒரு சமயம், இஸ்ரவேலர் தங்களுடைய கிராமத்திற்கு வெளியே, விளைந்திருந்த 'சிறு பயறு'களை (வ11) அறுவடை செய்து கொண்டுள்ளனர். திடீரென ஆர்ப்பரிக்கும் தொனி கேட்கிறது. உற்று நோக்கினால் எதிரியின் சேனை ஆரவாரத்தோடு வருகிறது. வருவதின் நோக்கம் விளைச்சலை முற்றிலும் சேதப்படுத்துவது அல்லது திருடிச் செல்வது. "ஐயோ பெலிஸ்தர் வருகிறார்கள்" என்ற அவலக் கூக்குரல் ஜனங்களுக்குள்ளே எழும்புகிறது. பீதியும், கலக்கமும் அனைவரையும் கவ்வுகிறது. இஸ்ரவேலர் அனைவரும், பட்டணத்திற்கும் பாளையத்திற்கும், பின்னங்கால் பிடரியில் அடிக்க ஓடுகின்றனர். ஆனால், ஒரே ஒருவன் மாத்திரம் எதிரிகளைக் கண்டு கிஞ்சித்தும் அஞ்சாமல், **"அந்த நிலத்தின் நடுவில் நின்று அதைக் காப்பாற்றி, பெலிஸ்தரை மடங்கடித்துப் போட்டான்..."** (வ.12) அந்த வீரத்தின் விளை நிலம் தான் இந்த "சம்மா"

இவன் மூலம் நாம் இரண்டு முக்கியமான பாடங்களைக் கற்றுக் கொள்ள முடியும்.

## 1. "சம்மா நின்றான் (வ.12)

ஒரு புருஷனுக்குண்டான முதல் இலட்சணமே, பிரச்சினைகளைக் கண்டு ஓடி ஒளியாமல் "நிற்பது" தான். வெற்றிக்கு முதல் படியே இதுதான். இவன் வீட்டின் வாசலிலோ, பட்டணத்தின் நடுவிலோ நிற்கவில்லை. "நிலத்தின் நடுவிலே நின்றான்" என்று வேதம் சொல்கிறது. எதிரிகளைச் சமாளிப்பதோடல்லாமல் வேறு பல பிரச்னைகளும் அவனுக்கு இருந்திருக்க வேண்டும். ஆம், அங்கே காட்டு மிருகங்கள் ஓலமிட்டிருக்கும், விஷ பாம்புகள் ஊர்ந்து கொண்டிருந்திருக்கும், பலவிதமான பறவைகள் விநோதமான ஒலிகளை எழுப்பியிருக்கும். ஆனால் இந்த'சம்மா' வோ, ஒன்றைப் பற்றியும் கவலைப்படாமல், கலங்காமல் நின்றான்.

ஒரு கணம், சிந்தித்துப் பாருங்கள். உடனிருந்த அனைவரும் ஓடிவிட்டனர். சுற்றத்தார் ஓடிவிட்டனர். குடும்பத்தாரும் ஓடிவிட்டனர். இவன் மாத்திரம் நிற்கிறான். அதுவும் யாருக்கு எதிராக? யுத்தத்திற்கு ஆயத்தமாக வருகிற பெரும் சேனைக்கு முன்பாக நிற்கிறான். வேலோடும், வாளோடும், வில்லோடும் வருகிற கூட்டத்திற்கு முன், நிமிர்ந்து நிற்கிறான். உலகில் உள்ள எந்தவொரு நாட்டின் சிப்பாயாக இருந்தாலும், இந்தச் சூழ்நிலையில் நிற்க முடியாது. ஆனால் 'சம்மாவோ' நிலத்தின் நடுவில் நின்றான்.

அவனால் எப்படி நிற்க முடிந்தது? பெலிஸ்தரை எதிர்ப்பதற்கு, அப்படி அவனிடம் என்ன தான் இருந்தது? அவனிடம் இருந்தெல்லாம் ஒன்றே ஒன்று தான் "கர்த்தர் மீது நம்பிக்கை" இந்த ஆயுதத்தைக் கையில் பிடித்துக் கொண்டு தான் நெஞ்சில் சுமந்து கொண்டு தான் அவன் நின்றான்.

அன்பரே! இன்றைய கிறிஸ்தவத்திற்கு உடனடித் தேவை "நிற்கக் கூடிய" கிறிஸ்தவர்கள் நமக்கு ஒப்புவிக்கப்பட்டிருக்கிற மெய்யான சத்தியத்திற்கெதிரான தாக்குதல் அன்றாடம் நடந்து கொண்டுள்ளது. இயேசுக்கிறிஸ்து, தம்முடைய இரத்தத்தை சிந்தி சம்பாதித்த சபைக்கெதிரான பிரச்சாரம் நித்தமும் தொடர்கிறது. ஆனால், மெய்க் கிறிஸ்தவம் வாய் மூடி மௌனியாக நின்று வேடிக்கை பார்க்கிறது. கொள்கைக்காக, வசனத்திற்காக, சபைக்காக எழுந்து நிற்பவர்களை பூத கண்ணாடி வைத்து தேடவேண்டியுள்ளது. அப்படியே சுதாரித்து எழுந்து நின்றாலும் சோதனைகள் வரும் பொழுது கூனிக் குறுகி, வளைந்து இருக்கிற இடம் தெரியாமல் ஒளிந்து கொள்கிறோம். சத்தியத்தோடு "சமரசம்" செய்து கொள்ளவே பெரும்பான்மையான கிறிஸ்தவர்கள் விரும்புகின்றனர். ஏன் இந்த அவல நிலை?

கிறிஸ்தவ சமுதாயம், "பெரும்பான்மைக்கு" "அர்த்தம் தெரியாத முக்கியத்துவம் கொடுக்கிறது. ஒரு "தவறை" வேத வசனத்தோடு ஒப்பிட்டு, பொருந்தாத பட்சத்தில் அதை "தவறாகவே" பார்க்காமல், எத்தனைபேர் அந்தத் தவற்றை செய்கிறார்களென்று இரகசிய கணக்கெடுக்கிறது. எண்ணிக்கை, தங்களுக்கு சாதகமாக இருந்தால் பெரும்பாலானவர்களில் தாங்களும் ஒருவராக இருப்பதில் தவறில்லை என்று பொய்ச் சமாதானம் செய்து கொள்கிறது. இந்த "சம்மா" தேவனுக்காக நிற்பதில் பெரும்பான்மை பார்த்தானா? நீதிக்காகப் போராடும் ஒருவன் பெரும்பான்மை பார்ப்பது அநீதியானது. சத்தியத்திற்காக வாழ ஆசைப்படுகிறவன் பெரும்பான்மை பார்ப்பது அசத்தியமானது. விசுவாசத்திற்காகப் போராடும் வீரன், பெரும்பான்மை பார்ப்பது கோழைத்தனமானது.

அருமையானவரே! வேதாகம சரித்திரத்தை ஆரம்பத்திலிருந்து புரட்டிப் பாருங்கள். எப்பொழுதாவது பெரும்பான்மையானவர்கள் நன்மை செய்திருக்கிறார்களா? நீதிக்காகப் போராடியிருக்கிறார்களா? அல்லது தேவனுடைய பட்சத்தில் தான் நின்றிருக்கிறார்களா? நோவாவின் நாட்களில் எத்தனைபேர் இரட்சிக்கப்பட்டார்கள்? எட்டுப் பேர் தானே (ஆதி 7:13) திரளான ஜனங்களை வழிநடத்தின யோசுவா, இறுதியில் எத்தனை பேருக்கு உத்திரவாதம் கொடுக்க முடிந்தது? தன்னுடைய குடும்பத்திற்கு மட்டும் தானே. (யோசு 24:15) எகிப்திலிருந்து புறப்பட்ட ஆறு லட்சம் புருஷர்களில் கானானுக்குள் பிரவேசித்தவர்கள் எத்தனை பேர் தெரியுமா? இரண்டு பேர் மட்டுமே. (எண் 32 : 11,12) சரி, இயேசுக் கிறிஸ்துவை விடுதலை செய் என்று பிலாத்துவிடம் கேட்டது தான் எத்தனை பேர்? ஒருவருமேயில்லை தானே (மத் 27:26)

பின்னே, ஏன் நாம் "பெரும்பான்மை" எண்ணத்தை உதறித் தள்ளிவிட்டு'சம்மாவைப்' போல் நீதிக்காக எழுந்து நிற்கக் கூடாது. "தீமை செய்யத் திரளான பேர்களைப் பின்பற்றாதிருப்பாயாக் (யாத் 23:2) என்று வசனம் சொல்வதைக் கேளுங்கள். நாம் உறுதியுள்ளவர்களாய் நின்றால், அதற்குண்டான பலனை கர்த்தர் நமக்குக் கொடுப்பார் (I கொரி 15:58) நீங்கள் கிறிஸ்துவுக்காக நிற்கத் தயாரா?

## 2. "சம்மா" போரிட்டான்

". . . . . . நிலத்தின் நடுவிலே நின்று அதைக் காப்பாற்றி பெலிஸ்தரை மடங்கடித்துப் போட்டான்" என்று வசனம் இவனைப் பற்றிச் சொல்கிறது (வ.12) ஆயுதங்களோடு ஆர்ப்பரித்து வந்த பெலிஸ்தரை, எதிர்த்துப் போரிடாமல், மடங்கடித்திருக்க முடியுமா? நிச்சயமாகவே,அவன்போரிட்டான்.

'சம்மா' கர்த்தருடைய பட்சத்தில் நின்று போரிட்டான் கர்த்தரும் அவனுடைய பட்சத்தில் இருந்தார். அப்போஸ்தலன் பவுல் உரோமையருக்கு எழுதும் பொழுது இவ்விதமாகக் குறிப்பிடுகிறார். ". . . . தேவன் நம்முடைய பட்சத்தில் இருந்தால் நமக்கு விரோதமாயிருப்பவன் யார்? (ரோம 8:31) உலகத்தின் எந்த சக்திக்கும் கர்த்தரை எதிர்த்து வெற்றிக்காணும் சக்தியில்லை. ஏனெனில், வானத்திலும், பூமியிலும் சகல அதிகாரமும் அவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. (மத் 28:18)

தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட ஜனமாகிய இஸ்ரவேல் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாகி, கானான் தேசத்தை நோக்கி வருகின்றனர். கர்த்தர் இஸ்ரவேலருக்கு கொடுக்க இருக்கும் அத்தேசத்தின் தன்மையை, தெரிந்து கொள்ள விரும்பிய மோசே, கோத்திரத்திற்கு ஒருவராகத் தெரிந்தெடுத்து 12 பேரை அனுப்புகிறான். அந்தப் பன்னிரு வேவுகாரர்களில் யோசுவாவும், காலேபும் தவிர, மீதி 10 பேரும், அத்தேசத்தைக் குறித்து துர்ச்செய்தி பரப்பி, ஜனங்களின் இருதயம் கரைந்துபோகும்படி செய்தனர் (எண் 13:33). அதைக் கேட்ட ஜனங்கள் மோசேக்கு விரோதமாக எழும்பி கலகம் செய்தனர். ஆனால், யோசுவாவும், காலேபும் ஜனங்களைப் பார்த்து, கானானிலுள்ள அந்த இராட்சத மனிதர்களினிமித்தம் நாம் கலங்கவேண்டியதில்லை என உறுதிபடக் கூறுவதைக் கவனியுங்கள். ". . . .அவர்களைக் காத்த நிழல் அவர்களை விட்டு விலகிப் போயிற்று. கர்த்தர் நம்மோடே இருக்கிறார் நாம் அவர்களுக்கு பயப்பட வேண்டியதில்லை என்றார்கள். (யோசு 14:9) கர்த்தர் நம்மோடே இருக்கிறார் என்பதன் பொருள் கர்த்தர் நமக்காக யுத்தம் பண்ணுவார் என்பதே. வெற்றியைக் கொடுக்கிறவர் கர்த்தரே என்பதை ஞானி சாலமோன், தன் ஞானத்தால் எவ்வளவு அழகாக வெளிப்படுத்துகிறார்

பாருங்கள். "குதிரை யுத்த நாளுக்கு ஆயத்தமாக்கப்படும் ஜெயமோ **கர்த்தரால் வரும்** (நீதி 21:31)

மேலும், இஸ்ரவேல் ஜனங்களை கானானுக்குள் வெற்றியாய் வழிநடத்தின தலைவன் யோசுவா, தன்னுடைய இறுதி நாட்களில் இஸ்ரவேலின் மூப்பரையும், தலைவரையும் நியாயாதிபதிகளையும், அதிபதிகளையும் அழைப்பித்துச் சொல்லும் அறிவுரையைக் கேளுங்கள். உங்களைச் சுற்றிலும் இருக்கிற ஜனங்களைக் குறித்து உங்களுக்குப் பயம் வேண்டாம். அவர்களை உங்கள் கையில் தேவன் ஒப்புக் கொடுத்தார். மோசேயின் பிரமாணத்தை மாத்திரம் விட்டு விலகாதிருங்கள் இனியும் உங்களுக்கு உறுதியான வெற்றி கிட்டும் என்கிறார். **"உங்களில் ஒருவன் ஆயிரம் பேரைத் துரத்துவான்; உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களுக்கு சொன்னபடி அவர்தாமே உங்களுக்காக யுத்தம் பண்ணுகிறார்** (யோசு 23:1-10) என்றான்.

வாசகரே! 'சம்மா' நின்றான். 'சம்மா' போரிட்டான் 'சம்மா' வெற்றி பெற்றான்."**கர்த்தர் பெரிய இரட்சிப்பை நடப்பித்தார்**" என்று வசனம் சொல்கிறது. (வ.12)

நம்முடைய ஜீவியத்தில் நாம் என்ன செய்து கொண்டுள்ளோம்? விலாசம் தெரியாத இந்த 'சம்மா'விடம் பாடம் கற்றுக்கொள்ள நாம் தயாரா? தன்னந்தனியனாக நின்று தன்னுடைய உரிமைக்காகப் போராடினதைப் போல் நாமும் போரிட ஆயத்தமா?

இன்று நம்முடைய போராட்டம் வித்தியாசமானது. உலகத்தின் அதிபதியாகிய பிசாசோடும், அவனுடைய தூதர்களோடும் போராட வேண்டியுள்ளது. இருளின் அதிபதியாகிய பிசாசானவன், ஒளியின் தூதனுடைய வேஷத்தை தரித்துக்கொண்டு, கிறிஸ்தவத்தையும், கிறிஸ்தவர்களையும் மாய வலைக்குள் சிக்க வைத்துள்ளான். விடுவிப்பார் இல்லாமல் ஜனங்கள் தவிக்கின்றனர். இந்த மக்களின் ஆத்மாவின் மீது உங்களுக்கு பாரம் இல்லையா?

நண்பரே! நீங்கள் ஏன் ஒரு 'சம்மாவாக' மாறக் கூடாது? தூய சத்தியத்திற்காக நீங்கள் ஏன் எழுந்து நிற்கக் கூடாது? இயேசுக் கிறிஸ்து கட்டின சபைக்காக நீங்கள் ஏன் சர்வாயுதவர்க்கத்தை எடுத்து போராடக் கூடாது? நீதிக்காகப் போராடின சம்மாவுக்கு இரட்சிப்பைக் கட்டளையிட்ட தேவன், நமக்கு வெற்றியைத் தரமாட்டாரா? தேவனிடத்தில் பட்சபாதம் இல்லை. (அப் 10:34) அவருடைய பட்சத்தில் நின்று நாம் முயற்சி செய்தால் வெற்றி நிச்சயம்!நிச்சயம்! முயல்வோம், வெற்றி பெறுவோம். தேசத்தை கிறிஸ்துவுக்குச் சொந்தமாக்குவோம்.

**EZS ராஜநாயகம்**

# "கடைசி நாட்கள்"

கடைசி நாட்களைப் பற்றி தேவனுடைய தீர்க்கதரிசிகள் முன்னுரைத்தனர். "கடைசி நாட்களில் கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதம் பர்வதங்களின் கொடுமுடியில் ஸ்தாபிக்கப்பட்டு, மலைகளுக்கு மேலாய் உயர்த்தப்படும்; எல்லா ஜாதிகளும் அதற்கு ஓடி வருவார்கள். திரளான ஜனங்கள் புறப்பட்டுவந்து, நாம் கர்த்தரின் பர்வதத்துக்கும், யாக்கோபின் தேவனுடைய ஆலயத்துக்கும் போவோம் வாருங்கள்; அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்பார், நாம் அவர் பாதைகளில் நடப்போம் என்பார்கள்; ஏனெனில் சீயோனிலிருந்து வேதமும், எருசலேமிலிருந்து கர்த்தரின் வசனமும் வெளிப்படும்" (ஏசாயா 2:2,3) என ஏசாயா கூறினார். இதே போன்று ஒரு அறிக்கையை மீகா 4:1,2 வசனங்களில் மீகாவும் வெளியிடுகிறார்.

புதிய ஏற்பாடுக்கு வருவோமானால், அப்போஸ்தலர் நடபடி 2ம் அதிகாரத்தில் குறிப்பிட்டுள்ளபடி, கர்த்தரின் கட்டளைப்படி பெந்தெகொஸ்தே நாளில் அப்போஸ்தலர்கள் எருசலேமிலே கூடி வந்தனர். (லூக் 24:44-49, அப் 1:8) அதன்பின், யோவான் 14:26ம் வசனத்தில் வாக்களிக்கப்பட்டபடி, அவர்கள் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டனர். அதன் விளைவாக, உலகம் எத்திசையிலுள்ள பல நாடுகளிலிருந்தும் வந்திருந்தவர்களின் மொழிகளிலே அவர்கள் (அப்போஸ்தலர்கள்) பேசத் தொடங்கினார்கள். மக்கள் ஆச்சரியப்படுகின்றனர். ஒருவேளை அவர்கள் குடித்திருக்கிறார்களோ என எண்ணுகின்றனர். "அப்பொழுது பேதுரு பதினொருவரோடுங்கூட நின்று, அவர்களை நோக்கி, உரத்த சத்தமாய், யூதர்களே, எருசலேமில் வாசம் பண்ணுகிற ஜனங்களே, நீங்களெல்லாரும் அறிந்து கொள்வீர்களாக, என் வார்த்தைகளுக்குச் செவிகொடுங்கள். நீங்கள் நினைக்கிறபடி இவர்கள் வெறிகொண்டவர்களல்ல, பொழுது விடிந்து மூன்றாம்மணி வேளையாயிருக்கிறதே தீர்க்கதரிசியாகிய யோவேலினால் உரைக்கப்பட்டபடியே இது நடந்தேறுகிறது. கடைசி நாட்களில் நான் மாம்சமான யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன்..." (அப். 2:14-27)

"பூர்வகாலங்களில் பங்கு பங்காகவும் வகை வகையாகவும், தீர்க்க தரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம் பற்றின தேவன், இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம் பற்றினார், இவரைச் சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார், இவரைக் கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார்" (எபி 1:1,2) என எபிரேய எழுத்தாளன் கூறினார். அத்தோடு, அப்போஸ்தலர் பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதினார். "மேலும் கடைசி நாட்களில் கொடிய காலங்கள் வருமென்று அறிவாயாக. எப்படியெனில் மனுஷர்கள் தற்பிரியராயும், பணப்பிரியராயும், வீம்புக்காரராயும், அகந்தையுள்ளவர்களாயும், தூஷிக்கிறவர்களாயும், தாய் தகப்பன்

மாருக்குக் கீழ்ப்படியாதவர்களாயும், நன்றியறியாதவர்களாயும், பரிசுத்தமில்லாதவர்களாயும், சுபாவ அன்பில்லாதவர்களாயும் இணங்காதவர்களாயும், அவதூறு செய்கிறவர்களாயும், இச்சையடக்க மில்லாதவர்களாயும் கொடுமையுள்ளவர்களாயும், நல்லோரைப் பகைக்கிறவர்களாயும், துரோகிகளாயும், துணிகர முள்ளவர்களாயும், இறுமாப்புள்ளவர்களாயும், தேவப்பிரியராயிராமல், சுகபோகப் பிரியராயும், தேவபக்தியின் வேஷத்தைத் தரித்து அதின் பெலனை மறுதலிக்கிறவர்களாயும் இருப்பார்கள்; இப்படிப்பட்டவர்களை விட்டு நீ விலகு'' (2 தீமோ 3:1-5).

மேலே எடுத்தாளப்பட்ட பல வசனங்களிலிருந்தும் நாம் காணுவதைப்போல, அந்தக் கடைசி நாட்களைப் பற்றியும் அந்த நாட்களில் நடைபெறவிருக்கும் பல காரியங்கள் பற்றியும் பல எழுத்தாளர்கள் பேசுகிறார்கள். முதலாவதாக, நாம் எந்த நாட்களைப் பற்றி பேசிக்கொண்டிருக்கிறோம். அவை எப்போது தொடங்க இருக்கின்றன, இப்போது அந்நாட்களில் நாம் வசித்துக் கொண்டிருப்போமானால், அந்நாட்களில் என்ன நடக்கும், எவ்வளவு காலம் அவை நீடிக்கும் என்றெல்லாம் நாம் வினவக்கூடும்.

கடைசி நாட்கள், எதிர்காலத்தில் வரப்போவதாக பழைய ஏற்பாடு எழுத்தாளர்கள் கூறுவதை தயவு செய்து கவனியுங்கள். அதன்பின், கிறிஸ்துவின் மரணத்திற்குப்பின்னர் புதிய ஏற்பாடு எழுத்தர்கள் பேசும்போது இந்நாட்கள் இப்போது நடைபெறுகின்றன என்கிறார்கள். பேதுருவிலிருந்து பெந்தெகொஸ்தே நாட்களைப் பற்றி நாம் மேற்கோள் காட்டியதை நீங்கள் கவனிக்க வேண்டும். பேதுரு யோவேலை மேற்கோள்காட்டி, தீர்க்கதரிசி யோவேலினால் கூறப்பட்டபடியே அச்சமயத்தில் நடப்பதாகக் கூறி, கடைசி நாட்களில் தேவன் தனது ஆவியை எல்லோர் பேரிலும் ஊற்றுவதாகக் கூறினார். அந்தப்படியே கிறிஸ்துவின் மரணத்திற்குப் பின் கடைசி நாட்கள் தொடங்கின. வேறு விதமாகக் கூறப்போனால், பிதாக்களின் காலம், மோசேயின் அல்லது யூதர்களின் காலம், போன்ற மிகப் பெரிய காலங்களுக்குப்பிறகு, இயேசுவின் மரணத்தில் தொடங்கி ஒரு புது சகாப்தம் ஆரம்பிக்கவிருக்கிறது. அதுவே கிறிஸ்தவ காலமாகும். இது கிறிஸ்து மீண்டும் வருவதற்கு முன்னர் உள்ள மிகப் பெரிய கடைசி காலமாகும். எனவே கடைசி நாட்கள் என்பது இதைக் குறிப்பிடுகிறதென்றால், கிறிஸ்துவின் மரணம் தொடங்கி கர்த்தரின் இரண்டாவது வருகை வரையுள்ள காலம் வரை அத்தோடு, கிறிஸ்தவ காலமும், நாம் காணும் சகலமும் முடிவுக்கு வரும். இப்போது கூட நாம் கடைசி நாட்களில் தான் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பதைக் கவனிக்க.

இந்தக் கடைசி நாட்களில் சில காரியங்கள் நடைபெற வேண்டியுள்ளன. இந்த நாட்களில் தான், பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தை அப்போஸ்தலர்கள் பெறுவார்கள். நற்செய்தி முதல் முதலாகப் போதிக்கப்படும், உண்மையில் சபை நிறுவப்படும். கிறிஸ்தவ சகாப்தம் செழித்தோங்கும், தேவன் தனது குமாரன் இயேசு கிறிஸ்து வழியாகப் பேசுவார், புதிய ஏற்பாடு எழுத்து வடிவில் மக்களுக்கு அளிக்கப்படும், கிறிஸ்து மீண்டும் வருவார். மேலும் பல காரியங்கள் நடைபெறும்.

இந்தக் கடைசி நாட்களில் கொடிய காலங்கள் வரும் என அப்போஸ்தலர் பவுல் எச்சரித்தார். அந்த நேரங்களில் காணப்படும் பாவங்களைப் பட்டியலிட்டிருப்பதைப் பார்க்கும்போது, இப்பாவங்களை எதிர்த்து மனின் எப்போதுமே போராட வேண்டியவனாக இருந்திருக்கிறான் என்றாலும், ஒருவேளை இச்செயல்கள் சீரழிந்து போய், முன்னைவிட மிகவும் மோசமான நிலைக்கு வந்து விட்டதாக மனிதன் எண்ணியிருக்கக் கூடும். ஆனால், மனிதனுடைய நிலை இச்சமயத்தில் எவ்வாறாக இருந்த போதிலும், மனிதன் பாவத்தில் வாழ்கிறான் என்பதும், வீழ்ந்து போன அவனுக்கு இரட்சிப்பு தேவை என்பதும், கிறிஸ்துவே அவனுடைய ஒரே இரட்சகராயிருக்கிறார் என்பதும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டிய காரியங்கள். எனவே, இரட்சிக்கப்பட்டு அவருடைய குடும்பத்தில் அங்கம் வகிக்க நாம் விசுவாசத்தாலும் கீழ்ப்படிதலாலும் அவருக்குப் பணிந்து கொள்வோம். இப்படியாக, நாம் இரட்சிக்கப்படுவோம் நித்திய ஜீவனை அடையும் நம்பிக்கையைப் பெறுவோம், நற்செய்தியை உலகின் பிற பகுதிகளுக்கு எடுத்துச் செல்லும் முயற்சியில் நமது வாழ்க்கையைத் தொடருவோம்.

கடைசி நாட்கள் என்பதை நமது கர்த்தர் மீண்டும் வர உலகப்பூர்வமான “ஒரு சில நாட்கள்” மட்டுமே இருப்பதாக அர்த்தம் செய்து கொண்டுள்ளனர் சிலர்.

ஆனால் உண்மையில் கிட்டத்தட்ட 2000 ஆண்டுகளாக கடைசி நாட்கள் ஓடிக்கொண்டிருக்கின்றன. இன்னும் எவ்வளவு காலம் அது நீடிக்கும் என்பதை அறிய எந்த வாய்ப்பும் இல்லை. கர்த்தர் இன்று வரக்கூடும் அல்லது இன்னும் 100 ஆண்டுகள் ஆகலாம், அல்லது 1000 ஆண்டுகள் கூட ஆகலாம். யாருக்குத் தெரியும்? தேவன் மட்டுமே அறிவார். (மத் 24:36) என்றாலும், குறிப்பிட வேண்டிய காரியம் என்னவென்றால், கர்த்தரின் இரண்டாம் வருகைக்கு முன்னுள்ள நாட்கள் யாவும், அவை எத்தனையாக இருப்பினும், அவைகள் யாவும் கடைசி நாட்களே, மீண்டுமாக, கர்த்தரின் வருகைக்கு முன் எவ்வளவு நாட்கள் கடந்திருப்பினும், நித்தியத்தில் ஒப்பிடும்போது அவை ஒரு சில நாட்களே. எனவே, கர்த்தரின் வருகைக்கு நாம் தயாராக இருக்க வேண்டும். அவர் வருகையுடன் இந்தக் கடைசி நாட்களும் ஒரு முடிவுக்கு வரும். அப்போது எல்லாரும் உயிர்த்தெழுவர். நாம் காணும் இந்த பூமியும் அதிலுள்ள யாவும் எரிந்து போகும்; நியாயத்தீர்ப்பு நடைபெறும், பாவிகள் நித்திய ஆக்கினைக்கும், நீதிமான்கள் கர்த்தரோடு எப்போதும் வாழ, பரலோகத்திற்கும் எடுத்துக் கொள்ளப்படுவர். நித்திய ஜீவனை அடைய நாம் தயார் செய்ய இந்தக் கடைசி நாட்கள் தரப்பட்டுள்ளன. இந்நாட்களை நாம் ஞானமாகப் பயன்படுத்துவோம். ஏனெனில் வேறு ஒரு சந்தர்ப்பம் இனி இல்லை.

**J.C. சோட்**

## பெண்கள் பகுதி

# கிறிஸ்தவப் பிள்ளை வளர்ப்பு

சுமார் மூன்று வயது தான் இருக்கும். அழகான பெண் குழந்தை. ஆனால் மகா பிடிவாதக்காரி. அவள் விரும்பிய ஏதோ ஒன்றைக் கொடுக்க அதன் பெற்றோர் மறுத்ததால் ஓ வென்று அலறி ஊரைக் கூட்டிக் கொண்டிருந்தாள். வழியில் போன ஒரு அம்மா, ஏய் என் இப்படி அடம் பிடித்துத் தொலைக்கிறாய்? என்று கேட்டது தான் தாமதம், குழந்தைக்கே உரிய துடுக்குத் தனத்தோடு அப்பதான் நான் கேட்டதைக் கொடுப்பார்கள் என்று வெடுக்கென்று பதில் வந்தது. கேட்ட அம்மாள் பேசாமல் விழி பிதுங்க பார்த்துக் கொண்டே நின்றாள்.

நாம் நினைக்கிறபடி குழந்தைகள் ஒன்றும் விபரம் தெரியாதைவகள் அல்ல. தங்கள் காரியத்தைச் சாதித்துக் கொள்ள பெற்றோர்களைக் காட்டிலும் அவைகள் ரொம்பவே தெரிந்து வைத்திருக்கின்றன, கத்தி ஆர்ப்பாட்டம் பண்ணி ராவடி பண்ணினால் தான் பெற்றோர்கள் தங்கள் பிடிவாதத்துக்கும், அடத்துக்கும் பணிந்து வருவர் என்பது அவர்கள் கணக்கு. இந்த விசயத்தில் குழந்தைகளுக்கு வெற்றி தான். ஆனால் இப்படி நல்லது கெட்டது தெரியாத குழந்தைகளின் விருப்பத்துக்கு பணிந்து போவது எவ்வளவு ஆபத்தானது என்பதை பெரியவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஒருவேளை பெற்றோர்கள் "நான் அவர்களது விருப்பத்தின் படி நடந்து தான் ஆகவேண்டும். இல்லாவிட்டால் அவர்கள் தொந்ததரவு தாங்க முடியாது". என்று சொல்லலாம் ஆனால் அது உண்மையா? இல்லை, பிரச்சனையை ஞானத்தோடு அணுகினால் பிள்ளைகளை ஒரு வழிக்குக் கொண்டு வரமுடியும். நான்கு பிள்ளைகளுக்கு தாய் என்ற அனுபவத்திலும் என் தாயாரிடம் கற்றுக் கொண்டதையும் உங்களுக்கு ஆலோசனையாகச் சொல்லுகிறேன் கேளுங்கள்.

முதலாவதாக பெற்றோர்கள் தாங்கள் பொறுப்புள்ளவர்கள் என்றும் குழந்தைகள் தன் சொல்லுக் கீழ்ப்படிய வேண்டியவர்கள் என்றும் உணர வேண்டும். இந்த தீர்மானத்தில் உறுதியாக இருந்து விட்டால் பிரச்சனையின் பெரும்பகுதி தீர்ந்த மாதிரி தான். அதற்குப் பிறகு குழந்தைகளின் சுபாவத்துக்கு ஏற்றவாறு அவரவர்களை எப்படி சமாளிப்பது என்பதை சுலபமாகப் புரிந்து கொள்ளலாம். ஏனெனில் எல்லாக்குழந்தைகளும் ஒன்று போல் இராது. ஒவ்வொன்றும் ஒரு கம்ப்யூட்டர். இரண்டாவதாக, குழந்தையின் தன்மைக் கேற்றபடி மனோதத்துவ முறைகளைக் கையாள வேண்டும். ஏன் என்பதற்கான காரணத்தைச்

சொல்லி கொஞ்சம் கடிந்து பேசினாலே சில குழந்தைகளுக்குப் போதும், வேறு சில குழந்தைகள், அவைகள் விரும்புகிற விளையாட்டுச் சாமான்களையோ, பொம்மைகளையோ பிடுங்கிக் கொண்டு ஒழுங்காக சத்தம் இல்லாமல் இருந்தால் தான் கிடைக்கும் என்று மிரட்டினால் பணிந்து விடும். வேறு சிலர் அவர்கள் விரும்புகிற வேற ஏதேனும் பொழுது போக்கு அம்சங்களை பறிமுதல் செய்தால் வழிக்கு வருவார்கள்.

ஒரு குழந்தை அடம்பிடித்துக் கத்துவதற்குக் காரணம் என்ன? ஒரு வேளை பெற்றோர்கள் மற்றெல்லாவற்றையும் விட்டு விட்டுத் தன்னைக் கவனிக்க வேண்டும் என்று இந்த முறையைக் கையாளளாம். என்னுடைய குழந்தைகளிட மிருந்து நான் ஒன்றைக் கற்றுக் கொண்டேன். அப்படிக் கத்தி அடம்பிடிகிற குழந்தையைக் கொண்டு போய் ஒரு தனி அறையில் விட்டு விட்டால் அது கத்துவதை விரைவில் நிறுத்திக் கொள்ளும். "யாருடா அவன் அழுகிறவன்? போ, போய் குளியல் அறைக்குள்ளே உட்கார்ந்து கொண்டு அழு. அல்லது உன் படுக்கையறைக்குச் சென்று கத்து அல்லது அந்த மூலையில் நின்று சுவர்ப்புறமாகத் திரும்பிக் கொண்டு அழுது தொலை. மறுபடியும் நீ சிரித்த முகத்தோடு வருகிறவரை என்கிட்ட வரக்கூடாது". என்று கண்டிப்பானகுரலில் சொல்லி விடுவேன். பாருங்களேன்! கொஞ்ச நேரத்தில் கண்ணீர் மாயமாய் மறைந்து போகும். கதறல் நின்று விடும். குழந்தைக்குக் கூட ஒருவரும் நம்முடைய கதறலை இரசிக்கவில்லை என்று தெரிந்தால் அது வீண் முயற்சி என்று கைவிட்டு விடுகிறது.

இவ்விதமாக பெற்றோர்களிடத்தில் நம்முடைய பிடிவாதம் செல்லாது என்று தெரிந்து விட்டால் அநேகமாக சேட்டைகள் தானாகக் குறைந்து போகும். ஆனாலும் சில வேளைகளில் கண்டிப்பும் சிறு தண்டனைகளும் தேவைப் படலாம். பெற்றோர்கள், குழந்தை யின் நலனைக் கருதி அதைச் செய்யத் தயங்கக் கூடாது.

சில வேளைகளில் பிள்ளைகள் முரண்டு பிடித்துக் கொண்டு கீழ்ப்படிய மறுக்கும் போது பெற்றோர்களும் ஆத்திரமடைந்து அவனை கண்டபடி கண்டதைக் கொண்டு வெறித்தனமாகத் தாக்கி விடுகிறார்கள். இது விசனிக்கத் தக்க காரியம், அப்படி செய்வோமானால் அந்த முரண்டு பிடிக்கிற குழந்தையை விட நாம் எந்த வகையில் மேம்பட்டவர்கள்? அது குழந்தை நல்லொழுக்கத்தில் வளரக் கொஞ்சமும் உதவாது.

தேவைப்பட்டால் குழந்தைகள் அடித்து மிரட்ட வேண்டி வரலாம். அப்படிச் செய்யும் போது நிதானம் இழக்காமல் அன்போடும் அக்கறையோடும் தான் செய்ய வேண்டும். குழந்தையைப் அடிப்பதற்கு நான் உபயோகப் படுத்தும் ஒரு பொருளைக் கொண்டு என்னையே அடித்துப் பார்த்துக் கொள்வேன். அப்பொழுது அதை எப்படி உபயோகித்தால் குழந்தைக்கு உடலில் காயங்களோ மற்ற தொந்தரவுகளோ ஏற்படாது என்று தெரிந்து விடும். என்னுடைய தாயார் நான்

சிறு பிள்ளையாக இருந்த பொழுது உபயோகித்ததும் நான் தாயான பிறகு எனக்குத் கொடுத்த ஆலோசனையின் படியும், நல்ல மிலாறுகள் அதாவது ஊஞ்ச மரக்குச்சி அல்லது அசோக மரக்குச்சி ஏற்ற கருவியாக இருக்கும். அவைகளைக் கொண்டு அடித்தால் சுளீர் என்று வலி ஏற்படும். அது குழந்தைக்கு நல்ல சிகிச்சை ஆனால் வேறே தொந்தரவு ஏற்படாது. இருந்த போதிலும் ஆத்திரத்தினால் ஓங்கி அடித்து விடாதபடி முதலில் நம்மை நாமே அடித்துப் பார்த்து நிதானமாய் குழந்தையின் மேல் பிரயோகிக்க வேண்டும்.

எல்லா பெற்றோர்களுக்குமே தங்கள் குழந்தையைச் சிறந்த பிரஜைகளாக வளர்க்கும் பொறுப்பு உண்டு கிறிஸ்தவப் பெற்றோர்களுக்கு இது மிகவும் அதிகம், ஏனெனில் வேத புத்தகத்தில் குழந்தைகளை வளர்ப்பது பற்றி பல ஆலோசனைகள் சொல்லப்பட்டிருக்கின்றன.

**பெட்டிபர்ட்டன் சோட்** **ரேச்சல் R. நாயகம்**

## ஊழியர்கள் கவனத்திற்கு

கர்த்தரின் பெரிதான கிருபையால் இவ்விதழின் ஆசிரியரான அடியேனுக்கு, கிறிஸ்தவத் திருமணங்கள் நடத்திவைக்கும் உரிமம் (Marriage Licence), தமிழக அரசால் வழங்கப்பட்டுள்ளது. தமிழகத்திலுள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் சென்று கிறிஸ்தவத் திருமணங்கள் நடத்தி, பதிவு செய்யலாம்.

தேவைப்படுவோர், அடியேனின் சேவையைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

**'நன்றி'**

**- ஆசிரியர்**

# சபையின் ஆளுகை அமைப்பு

". . . . . . . . . . . தேவனுடைய வீட்டியே நடக்க வேண்டிய வகையை நீ அறியும்படி இவைகளை உனக்கு எழுதுகிறேன்; அந்த வீடு ஜீவனுள்ள தேவனுடைய சபையாய்ச் சத்தியத்துக்குத் தூணும் ஆதாரமுமாயிருக்கிறது" (1 தீமோ 3:15)

**கிறிஸ்து தன் சபையைக் கட்டினார் - அதன் தலைவராக இருக்கிறார் :-**

". . . . . என் சபையைக் கட்டுவேன்" (மத். 16:18) ". . . . . தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக்கொண்ட தமது சபை. . ." (அப் 20:28) "கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறார். . . . . அவரே சரீரத்திற்கும் இரட்சகராயிருக்கிறார்" - எபே 5:23.

**தன்னுடைய சபையின் மேல் கிறிஸ்துவுக்கு சகல அதிகாரங்களும் உண்டு :-**

"வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் நீங்கள் புறப்பட்டுபோய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி. . . . . நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள்" (அவருடைய அப்போஸ்தலர்களுக்கு கிறிஸ்து கட்டளையிடுகிறார்) - மத். 28:18-20.

தனது வார்த்தையைப் போதிக்க அவரது அப்போஸ்தலர்களுக்கு கிறிஸ்து அதிகாரம் அளித்தார்

". . . . . . அவர் (கிறிஸ்து) அவர்களை நோக்கி (தனது அப்போஸ்தலர்களை) நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேத்தைப் பிரசங்கியுங்கள்" - மாற்கு 16:15.

". . . . . எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசி பரியந்தமும், எனக்கு (கிறிஸ்துவின்) சாட்சிகளாயிருப்பீர்கள்" (அப் போஸ்தலர்கள்)- அப் 1:8.

**கிறிஸ்துவின் அப்போஸ்தலர்கள் அவருடைய நற்செய்தியைப் போதிக்க பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டனர் :-**

"என் (கிறிஸ்துவின்) நாமத்தினாலே பிதா அனுப்பப் போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் (அப்போஸ்தலர்களுக்கு) போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார்". - யோவான் 14:26.

"வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது". - 2 தீமோ 3:16-17 (பார்க்க : 2 பேதுரு 3:15-16)

### கிறிஸ்துவின் நற்செய்தி அவருக்குக் கீழ்ப்படிகிறவர்களை இரட்சிக்கிறது :-

". . . . . இந்த இயேசுவையே தேவன் ஆண்டவரும் கிறிஸ்துவு மாக்கினாரென்று. . . . . யாவரும் நிச்சயமாய் அறியக்கடவர்கள் (விசுவாசிக்கக்கடவர்) . . . . நீங்கள் மனந்திரும்பி (தேவனை நோக்கி) . . . . பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள் . . . . இரட்சிக்கப்படுகிற வர்களைக் கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக் கொண்டு வந்தார்". - அப் 2:36-38 47 - "எருசலேமிலுள்ள சபை" - அப். 8:1.

### இரட்சிக்கப்பட்ட யாவரும் கிறிஸ்துவின் சபையில் இருக்கின்றனர் :-

"அவரே (கிறிஸ்து) சபையாகிய சரீரத்துக்குத் தலையானவர்". கொலோ 1:18. "அவரே (கிறிஸ்து) சரீரத்திற்கும் இரட்சகராயிருக்கிறார். . . . நாம் (விசுவாசிகள்) அவருடைய சரீரத்தின் அவயங்கள்" - எபே 5:23,20 பார்க்க 1 கொரி 12:27)

### பரலோகத்தில் கிறிஸ்து - அவருடைய சபையின் ஒரே தலைவர் :-

". . . . . எல்லா நாமத்துக்கும் மேலாக அவர் (கிறிஸ்து) உயர்ந்திருக்கத்தக்கதாக, அவரை உன்னதங்களில் தமது வலது பாரிசத்தில் உட்காரும்படி செய்து, எல்லாவற்றையும் அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தி சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார் (தேவன்)". - எபே1:20-23.

### கிறிஸ்துவின் ஒரே சபை - பிராந்திய சபைகள் :-

". . . . ஒரே சரீரம் உண்டு" - எபே 4:4

"கிறிஸ்துவின் சபையார் உங்களை வாழ்த்துகிறார்கள்" ரோமர் 16:16 "பவுல் . . . கொரிந்துவிலே கிறிஸ்து இயேசுவுக்குள் பரிசுத்த மாக்கப்பட்டவர்களாயும், பரிசுத்தவான்களாகும்படி அழைக்கப்பட்டவர் களுமாயிருக்கிற தேவனுடைய சபைக்கு . . . எழுதுகிறதாவது; . . . நான் எங்கும் எந்த சபையிலும் போதித்து வருகிற பிரகாரம் கிறிஸ்துவுக்குள்ளான என் நடக்கைகளை அவன் (தீமோத்தேயு) உங்களுக்கு ஞாபகப்படுத்துவான். பரிசுத்தவான்களுக்காகச்

சேர்க்கப்படும் தர்மப்பணத்தைக் குறித்து நான் கலாத்தியா நாட்டுச் சபைகளுக்குப் பண்ணின திட்டத்தின்படியே நீங்களும் செய்யுங்கள். . . . ஆசியா நாட்டிலுள்ள சபையார் உங்களை வாழ்த்துகிறார்கள். ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் தங்கள் வீட்டிலே கூடுகிற சபையோடுங்கூடக் கர்த்தருக்குள் உங்களை மிகவும் வாழ்த்துகிறார்கள்". - 1கொரி 1:1-2; 4:17; 16:1,19.

## பிராந்திய சபை சட்ட நூல்-கிறிஸ்துவின் புதிய ஏற்பாடு :-

"பூர்வகாலங்களில் . . . . தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் (இஸ்ரேல்) திருவுளம் பற்றின தேவன். . . இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்கு (கிறிஸ்தவர்களுக்கு) திருவுபுளம் பற்றினார்" எபி 1:1-2. "இவரோ (கிறிஸ்து) . . . விசேஷித்த உடன்படிக்கைக்கு . . . மத்தியஸ்தராயிருக்கிறார் . . . . முந்தினதை (உடன்படிக்கை) பழமையாக்கினார்". எபி 8:6,13. "நீங்களோ (கிறிஸ்தவர்கள்) . . . புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராகிய இயேசுவினிடத்திற்கு . . . வந்து சேர்ந்தீர்கள்" எபி 12:22-24. "அவர்கள் (எருசலேம் சபை) அப்போஸ்தலருடைய உபதேசத்தில் . . . உறுதியாய்த் தரித்திருந்தார்கள்" - அப். 2:42 (கிறிஸ்துவின் உபதேசத்தில்).

## ஒவ்வொரு பிராந்திய சபையும் கிறிஸ்துவின் நேரிடைப் பார்வையில் :-

"எபேசு சபைக்கு. . . . உன் கிரியைகளையும், உன் பிரயாசத்தையும், உன் பொறுமையையும் நான் அறிந்திருக்கிறேன். (இயேசு) ஆனாலும், நீ ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டாய் என்று உன் பேரில் எனக்கு குறை உண்டு. ஆகையால், நீ இன்ன நிலைமையிலிருந்து விழுந்தாய் என்பதை நினைத்து, மனந்திரும்பி, ஆதியில் செய்த கிரியைகளைச் செய்வாயாக; இல்லாவிட்டால் நான் சீக்கிரமாய் உன்னிடத்தில் வந்து உன் விளக்குத் தண்டை அதனிடத்தினின்று நீக்கி விடுவேன்" - வெளி 2:1-5. (2,3 அதிகாரங்களில் பிற பிராந்திய சபைகள் பற்றி காண்க).

## ஒவ்வொரு பிராந்திய சபையும் தனது சொந்த மூப்பர்களை நியமித்தல் :-

"அல்லாமலும், அந்தந்த சபைகளில் அவர்களுக்கு மூப்பர்களை ஏற்படுத்தினார்கள்" (பவுலும், பர்னபாவும்) - அப். 14:23. "மிலேத்துவிலிருந்து அவன் (பவுல்) எபேசுக்கு ஆள் அனுப்பி சபையின் மூப்பரை வரவழைத்தான். அவர்கள் தன்னிடத்தில் வந்து சேர்ந்தபொழுது அவன் அவர்களை நோக்கி. . . . ஆகையால், உங்களைக் குறித்தும் தேவன் நம்முடைய சுய ரத்தத்தினாலே சம்பாதித்துக் கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்த ஆவி உங்களைக் கண்காணிகளாகவைத்த மந்தை முழுவதையுங் குறித்தும், எச்சரிக்கையாயிருங்கள். அப். 2:17-18, 28. "நீ குறைவாயிருக்கிறவைகளை ஒழுங்குபடுத்தும் படிக்கும், நான் (பவுல்) உனக்குக் (தீத்து) கட்டளையிட்டபடியே, பட்டணங்கள் தோறும் மூப்பரை ஏற்படுத்தும்படிக்கும், உன்னைக் கிரேத்தா தீவிலே விட்டு வந்தேனே" - தீத்து 1:5. "பவுல் . . . . பிலிப்பி பட்டணத்தில் கிறிஸ்து

இயேசுவுக்குள்ளான பரிசுத்தவான்கள் அனைவருக்கும், கண்காணி களுக்கும், உதவிக்காரர்களுக்கும் எழுதுகிறதாவது" - பிலி 1:1.

**கிறிஸ்துவுக்கும் அவருடைய மூப்பர்களுக்கும் சபை அங்கத்தினர்கள் கட்டுப்பட்டவர்கள் :-**

"மேலும் நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரண புருஷராகும் வரைக்கும், பரிசுத்தவான்கள் சீர் பொருந்தும் பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்தி விருத்தி அடைவதற்காகவும், அவர் (கிறிஸ்து) சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரை சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பரகாவும், போதகராகவும் ஏற்படுத்தினார். . . . அன்புடன் சத்தியத்தைக் கைக் கொண்டு, தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும், நாம் வளருகிறவர்களாக இருக்கும்படியாக அப்படிச் செய்தார்". - எபே 4:11-15. "உங்களிலுள்ள மூப்பருக்கு நான் புத்தி சொல்லுகிறதென்னவென்றால்; உங்களிடத்திலுள்ள தேவனுடைய மந்தையை நீங்கள் மேய்த்து, மனப்பூர்வமாயும், உற்சாக மனதோடும், மந்தைக்கு மாதிரிகளாகவும், கண்காணிப்பு செய்யுங்கள். அப்படிச் செய்தால் பிரதான மேய்ப்பர் வெளிப்படும்போது மகிமையுள்ள வாடாத கிரீடத்தைப் பெறுவீர்கள். அந்தப்படி, இளைஞரே, மூப்பருக்குக் கீழ்ப்படியுங்கள்". ' பேதுரு 5:1-5. பார்க்க எபி 13:17.

**ஒவ்வொரு பிராந்திய சபைக்கும் ஊழியஞ்செய்யும் உதவிக்காரர் :-**

"மேலும், இவர்கள் முன்னதாகச் சோதிக்கப்பட வேண்டும்; குற்றஞ்சாட்டப்படாதவர்களானால் உதவிக்காரராக ஊழியஞ் செய்யலாம். . . இப்படி உதவிக்காரருடைய ஊழியத்தை நன்றாய்ச் செய்கிறவர்கள் தங்களுக்கு நல்ல நிலையையும், கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தில் மிகுந்த தைரியத்தையும் அடைவார்கள்". ' தீமோ 3:10,13. ". . . ஒருவன் உதவி செய்தால் தேவன் தந்தருளும் பெலத்தின்படி செய்யக்கடவன்" ' பேதுரு 4:11.

**பிராந்திய சபையும் சுவிசேஷகர்களும் :-**

"சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய்த் திருவசனத்தைப் பிரசங்கம் பண்ணு; எல்லா நீடிய சாந்தத்தோடும் உபதேசத்தோடும் கண்டனம் பண்ணி, கடிந்து கொண்டு, புத்தி சொல்லு. . . . நீயோ எல்லாவற்றிலும் மனத்தெளிவுள்ளவனாயிரு, தீங்கநுபவி, சுவிசேஷகனுடைய வேலையைச் செய், உன் ஊழியத்தை நிறைவேற்று". (2 தீமோ 4:2-5) "நீ வார்த்தையிலும், நடக்கையிலும், அன்பிலும், ஆவியிலும், விசுவாசத்திலும், கற்பிலும் விசுவாசிகளுக்கு மாதிரியாயிரு . . . வாசிக்கிறதிலும் புத்தி சொல்லுகிறதிலும் உபதேசிக்கிறதிலும் ஜாக்கிரதையாயிரு . . . . உன்னைக் குறித்தும் உபதேசத்தைக் குறித்தும் எச்சரிக்கையாயிரு; இவைகளில் நிலை கொண்டிரு, இப்படிச் செய்வாயானால், உன்னையும் உன்

உபதேசத்தைக் கேட்பவர்களையும் இரட்சித்துக் கொள்ளுவாய்" - 1 தீமோ 4:12-16. "எனக்குப் (அப் பவுல்) பிரியமும், கர்த்தருக்குள் உண்மையுள்ள என் குமாரனாகிய தீமோத்தேயுவை உங்களிடத்தில் (கொரிந்து சபைக்கு) அனுப்பினேன்; நான் எங்கும் எந்தச் சபையிலும் போதித்து வருகிற பிரகாரம் கிறிஸ்துவுக்குள்ளான என் நடக்கைகளை அவன் உங்களுக்கு ஞாபகப் படுத்துவான்". 1 கொரி 4:17. "எருசலேமிலுள்ள சபையார் அந்தியோக்கியா வரைக்கும் போகும்படிக்குப் பர்னபாவை அனுப்பினார்கள். . . அவன் போய்ச் சேர்ந்து . . . கர்த்தரிடத்தில் மன நிர்ணயமாய் நிலைத்திருக்கும்படி எல்லாருக்கும் புத்தி சொன்னான்". அப் 11:22-23.

## பிராந்திய சபையும், அதன் அங்கத்தினர்களும் :-

"அவனவன் பெற்ற வரத்தின்படியே, நீங்கள் தேவனுடைய பற்பல கிருபையுள்ள ஈவுகளைப் பகிர்ந்து கொடுக்கும் நல்ல உக்கிராணக்காரர் போல, ஒருவருக்கொருவர் உதவி செய்யுங்கள், ஒருவன் போதித்தால் தேவனுடைய வாக்கியங்களின்படி போதிக்கக்கடவன்; ஒருவன் உதவி செய்தால் தேவன் தந்தருளும் பெலத்தின்படி செய்யககடவன்; எல்லாவற்றிலேயும் இயேசு கிறிஸ்து மூலமாய்த் தேவன் மகிமைப்படும்படியே செய்வீர்களாக" - 1 பேதுரு 4:10-11. "நமக்கு அருளப்பட்ட கிருபையின்படியே நாம் வெவ்வேறான வரங்களுள்ளவர்களான படியினாலே, நம்மில் தீர்க்கதரிசனஞ்சொல்லுகிற வரத்தையுடையவன் விசுவாசப் பிரமாணத்துக்கேற்றதாகச் சொல்லக்கடவன். ஊழியஞ்செய்கிறவன் ஊழியத்திலும், போதிக்கிறவன் போதிக்கிறதிலும், புத்தி சொல்லுகிறவன் புத்தி சொல்லுகிறதிலும் தரித்திருக்கக்கடவன்; பகிர்ந்து கொடுக்கிறவன் வஞ்சனையில்லாமல் கொடுக்கக்கடவன்; முதலாளியானவன் ஜாக்கிரதையாயிருக்கக்கடவன்; இரக்கஞ் செய்கிறவன் உற்சாகத்துடனே செய்யக்கடவன்" - ரோமர் 12:6-8. "தேவன் தமது சித்தத்தின்படி, அவயவங்கள் ஒவ்வொன்றையும் சரீரத்திலே வைத்தார். . . சரீரத்திலே பிரிவினையுண்டாயிராமல், அவயவங்கள் ஒன்றைக்குறித்து ஒன்று கவலையாயிருக்கும்படிக்கு, தேவன். . . சரீரத்தை அமைத்திருக்கிறார்". 1 கொரி 12:18,25. "அன்புக்கும் நற்கிரியைகளுக்கும் நாம் ஏவப்படும்படி ஒருவரை ஒருவர் கவனித்து; சபை கூடி வருதலைச் சிலர் விட்டு விடுகிறது போல நாமும் விட்டு விடாமல், ஒருவருக்கொருவர் புத்தி சொல்லக்கடவோம்". எபி 10:24-25. "அவர்கள் (எருசலேம் சபை) அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள் - அப் 2:42.

**தமிழில் : எஸ்.எஸ். ராஜன்.**

# "விசுவாசம் மட்டும் போதும்" என போதிப்பது யார்?

## இயேசு அல்ல

"ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டான்" - யோ. 3:5.

"என் கற்பனைகளைப் பெற்றுக் கொண்டு அவைகளைக் கைக் கொள்ளுகிறவனே என்னிடத்தில் அன்பாயிருக்கிறான்" - யோ. 14:21.

"விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படு வான்". மாற்கு16:16

## யாக்கோபு அல்ல

"விசுவாசமும் கிரியைகளில்லாதிருப்பதால் தன்னிலேதானே செத்ததாயிருக்கும்"யாக். 2:17. "கிரியைகளில்லாத விசுவாசம் செத்தது" -யாக். 2:20.

"மனிதன் விசுவாசத்தினால் மாத்திரமல்ல, கிரியைகளினாலேயும் நீதி மானாக்கப்படுகிறான்" - 2:24.

## பேதுரு அல்ல

"நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள் "அப். 2:38 ."சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து, உங்கள் ஆத்துமாக் களைச் சுத்தமாக்கிக் கொண்டவர்களாயிருக்கிறீர்கள் "- 1பேதுரு 1:22.

"அதற்கு ஒப்பனையான ஞானஸ்நானமானது ........ இப்பொழுது நம்மையும் ........ இரட்சிக்கிறது" - 1 பேதுரு 3:21.

## பவுல் அல்ல

"கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக் கிறீர்களா? மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரி லிருந்து எழுப்பப்பட்டதுபோல நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ் நானத்தினாலே கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப்பட்டோம்' "- ரோமர் 6:3-4. "நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத் தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே. ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனை பேரோ,

அத்தனை பேரும் கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டீர்களே". கலா.3:26-27. "விருத்தசேதனமும் விருத்த சேதனமில்லாமையும் ஒன்றுக்கும் உதவாது, அன்பினால் கிரியை செய்கிற விசுவாசமே உதவும் "- கலா.5:6. தண்ணீரில் ஒருவன் ஞானஸ்நானம் பெறும்போது, அந்த பாவியான மனிதன் விசுவாசத்தின் மூலம் கிருபையால் இரட்சிக்கப்படுகிறான் என்றே இவர்கள் யாவரும் போதிக் கின்றனர். (அப்.8:36-38, 22:16). இரட்சிப்பு அடைய "விசுவாசம் மட்டும்"போதும், கீழ்ப்படிய வேண்டியதில்லை, என்ற போதனை மனித னுடைய கட்டளையே. கிறிஸ்துவிடமிருந்தோ, அல்லது அவருடைய அப்போஸ்தலர்களிடமிருந்தோ, அல்லது தீர்க்கதரிசிகளிட மிருந்தோ அவை வரவில்லை.

ஒரு பாவி நற்செய்தியைக் கேட்க வேண்டும். (ரோ. 10:17) அதை விசுவாசிக்க வேண்டும்- (யோ. 8:24) பாவங்களுக்காக மனஸ்தாபப்பட்ட வேண்டும் - (அப்.17:30.) கிறிஸ்துவில் அவனுடைய விசுவாசத்தை அறிக்கையிட வேண்டும் - (ரோ.10:9-10.) பாவங்களின் மன்னிப்புக் கென்று ஞானஸ்நானம் பெற வேண்டும் (அப் .2:38 )

**EZSR**

## தாவீதின் ஜெபம்

நாங்கள் எங்கள் வாழ்நாளெல்லாம் களிகூர்ந்து மகிழும்படி, காலையிலே எங்களை உமது கிருபையால் திருப்தியாக்கும்.

தேவரீர் எங்களைச் சிறுமைப்படுத்தின நாட்களுக்கும், நாங்கள் துன்பத்தைக் கண்ட வருஷங்களுக்கும் சரியாய் எங்களை மகிழ்ச்சியாக்கும்.

உமது கிரியை உமது ஊழியக்காரருக்கும், உமது மகிமை அவர்கள்பிள்ளைகளுக்கும் விளங்குவதாக,

எங்கள் தேவனாகிய ஆண்டவரின் பிரியம் எங்கள் மேல் இருப்பதாக, எங்கள் கைகளின் கிரியையை எங்களிடத்தில் உறுதிப்படுத்தும்; ஆம் எங்கள் கைகளின் கிரியையை எங்களிடத்தில் உறுதிபடுத்தியருளும்.

சங் 90 :14 -7

# சோதனையை வெற்றி கொள்

ஒரு பாவத்தில் நம்மை வீழ்த்த ஏதுவான சோதனை, நாம் எல்லோரும் சந்திக்கும் ஒரு பிரச்சனையாகும். அப்போஸ்தலர் பவுல் கூறியது போல "ஆதலால் நான் விரும்புகிற நன்மையைச் செய்யாமல், விரும்பாத தீமையையே செய்கிறேன்" (ரோ 7:19) இத்தகைய உணர்வை நாமும் அடைந்திருக்கக் கூடும். நாம் பாவம் செய்வதைத் தடுக்க வழி ஏதாகிலும் உண்டா ? நாம் சோதனையை வெற்றி கொள்ளுவது எப்படி?

ஒரு பிரச்சனையை வெல்லும்போது, இது போன்ற பிரச்சனைகளிலிருந்து பிறர் மீண்ட விதத்தைக் கவனிப்பது நமக்கு எப்போதுமே உதவியாயிருக்கும். சோதனைகளைச் சந்தித்த பல மக்களுடைய முன் மாதிரிகளை வேதாகமத்தில் காணலாம். சிலர் தங்களுக்கு வந்த சோதனைகளை வென்றனர்; பிறர் சோதனையில் வீழ்ந்து போயினர். மத்தேயு 4:1-11 வசனங்களில் குறிப்பிட்டுள்ள சோதனை பற்றி இக்கட்டுரையில் நாம் காணப்போகிறோம்.

## இயேசு சோதிக்கப்பட்டார் :-

நம்மில் பலருக்கு இவ்வசனப் பகுதி பழக்கமான ஒன்று. இயேசுவின் திருமுழுக்கைத் (ஞானஸ்நானம்) தொடர்ந்து (மத் 3:13-17) "இயேசு பிசாசினால் சோதிக்கப்படுவதற்கு ஆவியானவராலே வனாந்தரத்திற்குக் கொண்டு போகப்பட்டார்" (மத் 4:1) இயேசு "நாற்பது நாட்கள் வனாந்தரத்திலே இருந்தபின், பிசாசினால் சோதிக்கப்பட்டார்" என்பதாக லூக்காவும், மாற்கும் குறிப்பிடுகின்றனர். (லூக் 4:2; மாற்கு 1:13) பிசாசின் பல சோதனைகளையும் சந்தித்த இயேசு, நாற்பது நாட்கள் உணவின்றி இருந்தார் (மத் 4:2) என்ற போதிலும், ஒரு தடவையாகிலும் சோதனையில் வீழ்ந்து போகாமல், அந்த கடுஞ்சோதனையிலிருந்து வெளி வந்தார். உண்மையில், அவர் சந்தித்த சகல சோதனைகளையும் தொடர்ந்து இயேசு வெற்றிகரமாகக் கடந்து, முற்றிலும் பாவமற்ற ஒரு வாழ்க்கையை மேற்கொண்டார். (1 பேதுரு 2:22)

"ஆமாம், அவர் பாவம் செய்யவில்லை. அவர் தேவகுமாரன் அவர் தேவன், எனவே பாவம் செய்ய முடியாது" என்ற எண்ணமாகிய சோதனையில் நாம் விழக்கூடும். இயேசு தேவனாக இருந்தார் (இருக்கிறார்) என்பது உண்மையே. (யோ 1:1) ஆனால், இயேசு மனிதனாகவும் இருந்தார் என்பதை சில சமயங்களில் நாம் மறந்து விடுகிறோம். இயேசு தேவனுடைய ரூபமாக இருந்தும் (அவர் தேவனாக இருந்தார்) தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து மனுஷர் சாயலானார்", என்பதாக பவுலடியார் பிலிப்பியருக்கு எழுதிய நிருபம் 2ம் அதிகாரம் 6,7 வசனங்களில்

கூறுகிறார். ஏற்றுக்கொள்ள சிறிது கடினமான கருத்தாக இது இருக்கலாம். இயேசு 100% மனிதனாகவும், 100% தேவனாகவும் இருந்தார். மனிதனாக இருந்து, அவர் "சோதிக்கப்பட்டு பாடுபட்டார்" (எபி 2:18) நாம் சோதிக்கப்படும் போது ஏற்படும் அனுபவத்தையே, அவர் சோதிக்கப்படும் போதும் பெற்றார். எனவே, நமது பலவீனங்களுக்காக அவர் மனமிரங்கக்கூடும். (எபி 4:15) வித்தியாசம் என்னவென்றால், அவர் சோதனைகளை வென்றார். அவர், "எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிறார்" (எபி 4:15). நம்மைப் போலவே இயேசு சோதனைகளை சந்தித்தார். அவர் தேவனாக இருந்தது பூமியில் அவர் வாழும்போது சோதனையிலிருந்து அவருக்கு விடுதலை அளிக்கவில்லை. ஆனால் சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவி செய்ய வல்லவராயிருக்கிறார். (எபி. 2:18) எவ்வாறு சோதனையை அவர் வென்றார் என்பதை நாம் கற்றுக் கொண்டு அது போலவே நடப்பதும், அவர் நமக்கு உதவும் ஒரு வழிதான்.

### சோதனை எங்கிருந்து வந்தது?

இயேசு "பிசாசினால் சோதிக்கப்பட்டார்" என்பதை மத்தேயு 4:1ம் வசனத்தில் நாம் கண்டோம். 3ம் வசனத்தில், "சோதிப்பவன்" பிசாசு என தெளிவாக்கப்படுகிறது. சோதனையின் பிறப்பிடத்தை இதிலிருந்து நாம் கண்டு கொள்ளலாம். பாவத்தில் நம்மை வீழ்த்தும் சோதனைகளை தேவன் அனுப்புவதாக பல சமயங்களில் நாம் அவரை குற்றஞ்சாட்ட விரும்புகிறோம், நாம் தீங்கு செய்ய, தேவன் நம்மை சோதிப்பதில்லை. ". . . . தேவன் பொல்லாங்கினால் சோதிக்கப்படுகிறவரல்ல, ஒருவனையும் அவர் சோதிக்கிறவருமல்ல". (யாக் 1:13) நாம் பாவம் செய்வதை தேவன் விரும்பவில்லை. மாறாக, நாம் மனம் திருந்தி அவருக்கு விசுவாசமாக வாழவேண்டுமென்றே அவர் விரும்புகிறார். (2 பேதுரு 3:9) சோதனை பிசாசிடமிருந்து வருகிறது.

### சோதனை :-

இயேசுவை பாவத்தில் விழவைக்க முயலும்போது பிசாசானவன் பயன்படுத்திய மூன்று சோதனைகளைப் பற்றி இங்கு பார்ப்போம். 1 யோவான் 2:16ம் வசனத்தில்,"மாம்சத்தின்இச்சை", "கண்களின்இச்சை" "ஜீவனத்தின் பெருமை"
என மூன்று பிரிவுகளாக பாவம் பட்டியல் இடப்பட்டிருப்பதைக் காணலாம். இயேசு சந்தித்த சோதனைகள் இப்பிரிவுகளைச் சார்ந்ததே.

### மாம்சத்தின் இச்சை :-

"அப்பொழுது சோதனைக்காரன் அவரிடத்தில் வந்து; நீர் தேவனுடைய குமாரனேயானால் இந்தக் கல்லுகள் அப்பங்களாகும்படி சொல்லும் என்றான்". (மத் 4:3) வனாந்தரத்திலே இருந்த நாற்பது

நாட்களும் இயேசு உபவாசமாயிருந்தார். இந்நாட்களில் பிசாசு இயேசுவிடம் வந்து, கற்களை அப்பமாக மாற்ற தமது வல்லமையைப் பயன்படுத்தக் கோரி இயேசுவை சோதித்தது எந்த சமயத்தில் என்று குறிப்பிடப்படவில்லை. ஒரு மனிதன் பட்டினியாயிருப்பதை உணர அவனுக்கு அதிக நேரம் பிடிக்காது. பல நாட்களாக நீங்கள் உணவின்றி இருந்திருந்தால், பின்னர் சாப்பிட எவ்வாறு துடிப்பீர்கள் என்பதை அறிவீர்கள். இந்த காரியத்தில் மனிதனுடைய பலவீனத்தைப் புரிந்து கொண்ட சாத்தான், இதையே அடிப்படையாக வைத்து இயேசுவையும் சோதித்தான்.

**ஜீவனத்தின் பெருமை :-**

பின்னர், பிசாசு அவரைப் பரிசுத்த நகரத்திற்குக் கொண்டு போய், தேவாலயத்து உப்பரிகையின் மேல் அவரை நிறுத்தி, "நீர் தேவனுடைய குமாரனேயானால் தாழக்குதியும். . . . ." (மத் 4:5-6) எனக் கூறினான். இயேசுவை பாவத்தில் வீழ்த்தும் முயற்சியில், பழைய ஏற்பாட்டிலிருந்து சில வசனங்களைக் கூட சாத்தான் எடுத்து கையாண்டான். இயேசுவை பாதுகாக்க தேவன் வாக்களித்திருந்தார். ஆனால், தேவனுடைய வாக்கை பரீட்சித்துப் பார்க்க இயேசுவுக்கு தேவைப்படவில்லை. உண்மையில், அவர் அடுத்து சுட்டிக்காட்டுவது போல, இந்த சோதனையில் வீழ்ந்து விட்டால் தேவனுடைய வார்த்தைக்கு அது விநோதமானதாக இருக்கும்.

**கண்களின் இச்சை :-**

மறுபடியும், பிசாசு அவரை மிகவும் உயர்ந்த மலையின் மேல் கொண்டுபோய், உலகத்தின் சகல ராஜ்யங்களையும் அவைகளின் மகிமையையும் அவருக்குக் காண்பித்து, "நீர் சாஷ்டாங்கமாக விழுந்து, என்னைப் பணிந்து கொண்டால், இவைகளையெல்லாம் உமக்குத் தருவேன் என்று சொன்னான்". (மத் 4:9) அதிகாரம், செல்வச் செழிப்பு, மகிமை ஆகியவைகளோடு வாழ வேண்டுமென கனவு காணாதவர் யார்? ஒரு சிறு காரியத்தை மட்டும் இயேசு செய்திருந்தால் இத்தகைய சகல சம்பத்துக்களையும் இயேசு அடைந்திருப்பார். தேவனுடைய திட்டத்தை நிறைவேற்ற இது ஒரு குறுக்கு வழி என்று கூட இயேசு காரணம் கற்பித்திருக்க முடியும். அதிகத் தேவைகளுக்கு ஆசைப்படுவது, ஒரு வலுமிக்க சோதனை என்பதை சாத்தான் உணர்ந்தான்.

இயேசு சந்தித்த அதே சோதனைகளை, நம்மை சோதிக்கும் போது சாத்தான் உபயோகிக்காமல் இருக்கலாம். ஆனால் அவற்றைப் போன்ற சோதனைகளை நிச்சயம் நம்மிடம் அனுப்புகிறான். நம்மில் ஒவ்வொருவரும் மாறுபாடான பலவீனங்களைக் கொண்டவர்களாக இருக்கிறோம். தனிப்பட்ட ஒவ்வொருவரின் பலவீனங்களையே முதலாகக் கொண்டு சாத்தான் செயல்படுகிறான். நாம் சோதனையில்

வீழ்ந்து போனால் பாவம் பிறக்கிறது. (யாக். 1:13-15 பார்க்க) நம்மைப் போலவே, இயேசுவும் உண்மையில் பல சோதனைகளை அனுபவித்த போதிலும், அவர் பாவம் செய்யவில்லை என்பதை நாம் பார்க்க முடிகிறது. இதை அவர் சாதித்தது எப்படி?

## சோதனைகளை இயேசு எவ்வாறு வென்றார்?

சோதனைகளை எதிர்த்து நிற்க ஒருவல்லமையான ஆயுதத்தை இயேசு வைத்திருந்தார். அவருக்கு ஏற்பட்ட ஒவ்வொரு சோதனையையும் அவர் எவ்வாறு சந்தித்தார் என்பதைக் கவனித்துப் பாருங்கள் : " அவர் பிரதியுத்தரமாக . . . . என்று எழுதியிருக்கிறதே; அதற்கு இயேசு . . . . என்றும் எழுதியிருக்கிறதே; அப்பொழுது இயேசு, அப்பாலே போ சாத்தானே . . . என்று எழுதியிருக்கிறதே என்றார் (மத்4:4,7,10) தேவனுடைய வசனமே இயேசுவின் வல்லமையான ஆயுதம். நம்மை நோக்கி வரும் சோதனைகளை எதிர்த்து நிற்க, கிறிஸ்தவனின் சர்வாயுத வர்க்கத்தில் ஒன்று'தேவ வசனமாகிய ஆவியின் பட்டயம்; (எபே 6:10-17) பாவத்தையும் சோதனையையும் வெல்ல உண்மையிலேயே நமக்கு உதவும் ஒரு வல்லமை வாய்ந்த ஆயுதம் தேவனுடைய வசனமாகிய வேதாகமம். ஒரு வேதாகம புத்தகத்தை வைத்திருப்பதால் அல்ல; ஆனால் அது போதிப்பதை அறிந்து கொள்ளும் போதே அந்த வல்லமை வருகிறது. இயேசுவுக்கு முன்பாக விரித்து வைக்கப்பட்டிருந்த சோதனை என்னும் வலையைக் கண்டபோது, உண்மையிலேயே அவ்வலை விரிக்கப்பட்டிருப்பதின் காரணத்தை - சோதனை மூலம் பாவம் செய்தல் - உடனே புரிந்து கொண்டார். பின்னர், தேவனுடைய வசனத்தைக் கொண்டு அவற்றுடன் போரிட்டு சோதனைகளை வெல்லுகிறார்.

நமது வேதாகம அறிவு எப்படி இருக்கிறது? சத்தியத்திற்கும் தவறுக்கும் உள்ள வேறுபாட்டை நம்மால் புரிந்து கொள்ள முடிகிறதா? சோதனையை வெல்ல உதவும் வேதாகம அறிவு நமக்குண்டா? சோதனையை ஜெயிக்க இயேசு எந்த விதமான அதீத சக்தியையோ வல்லமையையோ உபயோகிக்கவில்லை, என்பது நமக்கு ஒரு சுவையான செய்தி அல்லது குழப்பமான தர்க்கங்களை அவர் செய்யவில்லை; நாம் செய்ய முடியாத எதையும் அவர் செய்யவில்லை, வசனத்தைப் பற்றிய அவருடைய ஞானத்தை மட்டுமே அவர் பயன்படுத்தினார். தேவனுடைய வசனத்தைப் படித்து, நாம் அவற்றை பயன்படுத்த அறிந்திருக்க வேண்டும். எனவே வேதாகமக் கல்வி மிகவும் அவசியம். தேவனுடைய வசனத்தைப் படிக்க தினமும் நேரம் ஒதுக்க வேண்டும். நாம் அதிகமாகக் கற்றுக்கொள்ள வேதாகம வகுப்புகளிலும், ஆராதனை சமயங்களிலும் கலந்து கொள்ள வேண்டியது அவசியம் என்ற போதிலும், வேதாகமத்தை அறியும் அறிவு மட்டும் போதாது; இயேசு செய்ததைப் போல அதை செயலாக்கும் அவசியமும் தேவை.

## *பிசாசு அவரை விட்டு அகன்றான் :-*

பிசாசானவன் கொண்டு வந்த சகல சோதனைகளையும் இயேசு வென்றார். தேவனுடைய வசனத்தை மேற்கொள் காட்டியே ஒவ்வொரு சோதனையையும் முறியடித்தார். அதன் பின் நடைபெற்றது மிகவும் ரசிக்கக் கூடிய ஒரு காரியம். "(பிசாசு) பின்பு சிலகாலம் அவரை விட்டு விலகிப் போனான்". லூக்கா இவ்வாறாக எழுதுகிறார்; "பிசாசானவன் சோதனையெல்லாம் முடிந்த பின்பு, சில காலம் அவரை விட்டு விலகிப் போனான்" (லூ 4:13) சில வேளைகளில், வெல்ல முடியாத அளவுக்கு எண்ணற்ற சோதனைகளை நாம் சந்திப்பதாகத் தோன்றக்கூடும். சோதனையில் வீழ்வதை விட்டால் வேறு வழியே இல்லை என்று கூடத்தோன்றும். ஆனால், அங்கு தான் நமது உறுதியான எதிர்ப்பைக் காட்ட வேண்டும். இயேசு அவ்வாறு நின்றார். பிசாசும் தற்காலிகமாக அகன்றது. நமக்கும் அதே வாக்கு அளிக்கப்பட்டுள்ளது; "பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களை விட்டு ஓடிப்போவான்" (யாக் 4:7) பிசாசு இயேசுவை விட்டு அகன்று போனான்; ஆனால் நிரந்தரமாக அல்ல மீண்டும் அவன் முயற்சிக்கக் கூடும் என்பதே லூக்காவின் இவ்வசனப்பகுதியிலிருந்து நாம் ஊகிக்கக்கூடியதாக இருக்கிறது. வேறு சோதனைகளை நாம் சந்திப்போம். ஆனால் அவற்றை நாம் வெல்லக்கூடும். சோதனைக்கு எதிரான ஒவ்வொரு வெற்றியும் சோதனைகளை மேற்கொள்ள நம்மை பலப்படுத்துகிறது.

## இறுதியாக :-

இயேசுவின் சோதனை பற்றிய மத்தேயுவின் படப்பிடிப்பு, நமக்களிக்கும் தெளிவான ஒரு பாடம் என்ன வென்றால், சோதனையில் நாம் வீழ்ந்து போகலாகாது. இயேசுவைப் பின்பற்றும் நாம், அவர் சோதனையை எவ்வழியில் வென்றாரோ அதே வழியை நாமும் பின்பற்ற வேண்டும். இயேசு சோதிக்கப்பட்டார், ஆனால் ஒவ்வொரு சோதனையையும் ஆவியின் பட்டயத்தைக் கொண்டு அவர் வீழ்த்தினார். எளிதாகத் தோன்றலாம். தேவனின் வழிகள் குழப்பமானவை அல்ல, பிசாசானவன் நம் முன்னால் வைக்கும் ஒவ்வொரு சோதனையிலிருந்தும், தப்பிக்க ஒரு வழியை தேவன் நம் முன் வைக்கிறார் என 1 கொரி 10:13ம் வசனத்தில் பவுலடியார் கூறுகிறார். தேவனுடைய வசனத்தை அறியும்போது பாவத்தை அடையாளம் காணவும், அதிலிருந்து தப்பிக்க தேவன் அளிக்கும் மார்க்கத்தைத் தெரிந்து கொள்ளவும் முடியும். தேவனுடைய வசனத்தை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். தேவனுடைய வசனத்தைத் தொடர்ந்து படிப்பவர்களாகவும், படித்து செயலாற்றுபவர்களாகவும் இருப்போம்; இயேசுவைப்போல சோதனையை வெல்வோம்.

**Jon Galloway** **ஜோன் கேலோவே**

## கருணைக் கண்கள்

"என்னைக் காப்பாற்றுங்கள், என்னைக் காப்பாற்றுங்கள்" - அந்த முனகல் குரல் தொடர்ந்து, மெதுவாகக் கேட்டுக் கொண்டிருந்தது.

கள்ளர் கையில் சிக்கி, அடிவாங்கி, ஆடைகளை இழந்து, காயங்களுடன் குற்றுயிராகக் கிடந்த அம்மனிதன், பேச சக்தியின்றி ஈனகுரலில் அதே வார்த்தைகளை திரும்பத் திரும்ப முனகிக் கொண்டிருந்தான். அவ்வழியே கடந்து செல்லுவோரை அவனுடைய குரல் கவர்ந்திழுக்கக் கூடும் என அவன் நம்பினான். ஆனால், அவ்வழியே யாராவது செல்லக் கூடுமா? ஒருவேளை எவருமே அவ்வழியில் வராமல், தனிமையிலேயே தான் முடிந்து போக வேண்டியிருக்குமோ என்ற அச்சமும் தலைதூக்கி நின்றது.

கற்கள் நிறைந்த அப்பாதையிலே திடீரென காலடிச் சத்தங்களை அவன் கேட்டான். பயம் அவனைக் கௌவியது. அவனைத் தீர்த்துக் கட்ட மீண்டும் கள்ளர் வருகின்றனரா? இல்லை! இரத்தக்காயமடைந்த அவனது கண்களின் ஓரப் பார்வையில் ஆசாரியனைப் போன்ற தோற்றமளித்த ஒரு மனிதனை அவன் கண்டான். அவன் இதயத்தில் நம்பிக்கை நிறைந்தது. கடைசியாக, அவன் காப்பாற்றப்படப் போகிறான் அல்லது அது பொய்த்துப் போகுமோ?

ஆம், அவன் காப்பாற்றப்படுவான். ஆனால் அந்த ஆசாரியானால் அல்ல; அல்லது அவனுக்குப் பின் அவ்வழியே கடந்து வந்த லேவியனாலும் அல்ல. மாறாக, அவனைக் காப்பாற்றப் போகிறவன், உதவக் கூடியவன் எனக் கொஞ்சமும் எதிர்பார்க்க முடியாத ஒரு மனிதன் - ஒரு சமாரியன் இன்றைய உலகில் வெகு அரிதாகக் காணப்படும் இரக்கம் என்ற ஒரு குணத்தின் பொருளை நாம் அறிந்து கொள்ள, அந்த பெயர் தெரியாத சமாரியன் இன்றும் நமக்கு உதவுகிறான்.

போதகரை சோதிக்கும் நோக்கத்தில் நியாயசாஸ்திரி ஒருவன் எழுப்பிய ஒரு கேள்விக்குப் பதிலாக, இயேசு நல்ல சமாரியன் கதையைச் சொன்னார். (லூக்கா10:30-37) ". . . நித்திய ஜீவனை சுதந்தரித்துக் கொள்ளும்படிக்கு நான் என்ன செய்ய வேண்டும்? (வ. 25) என்பது அந்த நியாயசாஸ்திரி எழுப்பிய முதல் கேள்வி. அந்த நியாயசாஸ்திரியின் கேள்விக்குப் பதிலாக இயேசு மற்றொரு கேள்வியைக் கேட்கிறார். "நியாயப்பிரமாணத்தில் என்ன எழுதியிருக்கிறது?" (வ. 26). இவ்வாறாக, அந்த நியாயசாஸ்திரியின் கேள்விக்கு அவனே சரியான பதிலளிக்கும்படி இயேசு செய்தார்: "உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன்முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழுப் பலத்தோடும் உன் முழுச் சிந்தையோடும் அன்புகூர்ந்து, உன்னிடத்தில் அன்புகூருவது போலப்

பிறனிடத்திலும் அன்பு கூருவாயாக என்று எழுதியிருக்கிறது என்றான்" (வ. 27) இயேசுவின் பதில் கேள்வியால் தான் கவிழ்க்கப்பட்டதை உணர்ந்து கலக்கமடைந்த அந்த நியாயசாஸ்திரி மீண்டும் ஒரு கேள்வியால் அவரை மடக்கிப்போடலாம் என்ற நப்பாசையில், "எனக்குப் பிறன் யார்?" (வ. 29) என்று கேட்டான்.

இக்கேள்வியைக் கேட்டதின் மூலம், சில மக்களை "பிறர்" என்று பாவிப்பதில் தனக்கு ஈடுபாடு எதுவும் இல்லை என்பதை வெளிப்படையாக அந்த நியாயசாஸ்திரி தெரிவித்தான். எனவே, அவனுடைய இரக்கத்திற்கு அவர்கள் அருகதையற்றவர்கள் என எண்ணினான். அவனுடைய தவறான, பாசத்திற்குப் புறம்பான நம்பிக்கையை இயேசுவின் நல்ல சமாரியனின் உவமை வெளிச்சம் போட்டுக்காட்டியது. உண்மையில், இயேசு விஷயத்தையே முற்றிலுமாக மாற்றினார். தனது உவமையின் இறுதியில் இயேசு அந்த நியாயசாஸ்திரியிடம், "இப்படியிருக்க, கள்ளர் கையில் அகப்பட்டவனுக்கு இந்த மூன்று பேரில் எவன் பிறனாயிருந்தான்? உனக்கு எப்படித் தோன்றுகிறது என்றார்" (வ. 36).

எனவே, இயேசுவின் கூற்றுப்படி, "யார் என்னுடைய பிறன்?" என்பதல்ல கேள்வி. மாறாக, "ஒரு பிறனாக நான் இருக்கிறேனா?" என்பதே. என்னுடைய கருணைக்கு பாத்திரவான் யார்?" என்பதல்ல, "நான் கருணையுள்ளவனா?" என்பதே கேள்வி. அந்த சமாரியன் காட்டிய இரக்கத்தை அளவு கோலாகக் கொண்டு, நாம் இரக்கமுள்ளவர்களாக இருக்கிறோமா என்று சீர்தூக்கிப் பார்க்க அந்த உவமை நம்மை வலியுறுத்துகிறது.

இயேசுவின் உவமையில் நான்கு பயணிகள் வருகின்றனர். கள்ளர் கையில் சிக்கிய முதல் பயணி ஒருவேளை யூதாக இருக்கக் கூடும். அவன் தனது ஆடைகளை இழந்து, காயப்பட்டு, மரணத்தைச் சந்திக்கும்படி குற்றுயிராக விடப்பட்டிருந்தான். ஒரு ஆசாரியன் இரண்டாவது பயணியாகவும், மூன்றாவதாக ஒரு லேவியனும் வந்தனர். ஒரு வேளை, எருசலேமில் தங்களுடைய ஆலயப்பணிகள் காரணமாக அவர்கள் அங்கு போய்க்கொண்டோ அல்லது அங்கிருந்து திரும்பிக் கொண்டோ இருந்தனர். பலத்த காயங்களுடன் வீதியின் ஓரத்தில் கிடந்தவனைக் கண்டதும் அவர்கள் விலகிப் போனார்கள்.

கதையின் இந்தக் கட்டத்தில், முதன் முதலாக இந்த உவமையைக் கேட்டுக் கொண்டிருந்த மக்கள், அடுத்து வரப்போகும் பயணியாராக இருக்கும் என வியப்புடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். ஒரு மதவாதிக்கு எதிரானவனை எதிர்பார்த்திருந்தால், ஒரு இஸ்ரவேலனை அடுத்த பயணியாக அவர்கள் எதிர்பார்த்திருக்க கூடும். ஆனால் "பின்பு ஒரு சமாரியன். . . " என இயேசு கதையைத் தொடர்ந்தார்.

நான்காவது பயணி யார் என்பதை இயேசு கூறக்கேட்டதும், கதை கேட்டுக்கொண்டிருந்த மக்கள் அவநம்பிக்கையில் அதிர்ச்சி

அடைந்திருக்க வேண்டும். அந்த காயமுற்ற யூதனை ஒரு சமாரியன் காப்பாற்றுவான் என்பதை எவரும் எதிர்பார்த்திருக்கவில்லை. ஏனெனில், யூதருக்கும் சமாரியருக்கும் இடையே எந்த நல்ல உறவும் கிடையாது - (யோ 4:9, 8:48, லூ 9:51-56) என்ற போதிலும் இயேசுவின் உவமையில் ஒரு சமாரியனே கதாநாயகனாக இருந்தான். காயமுற்றவனுக்கு முதல் உதவி செய்த பின்னர், இரக்கமுள்ள அந்த சமாரியன், அதிகப் பொருட் செலவில், தொடர்ந்த மருத்துவத்திற்கும் ஏற்பாடு செய்தான். (வசனங்கள் 34, 35)

பின்னர், தனது உவமையின் முக்கிய கருத்தை மையமாக வைத்து ஒரு கேள்வியை இயேசு கேட்டார், "கள்ளர் கையில் அகப்பட்டவனுக்கு இந்த மூன்று பேரில் எவன் பிறனாயிருந்தான்? உனக்கு எப்படித் தோன்றுகிறது என்றார்" (வ. 36) நிச்சயமாக, அந்த ஆசாரியனும், அந்த லேவியனும் பிறனாயிருந்திருக்கக் கூடும். காயமற்றுக் கிடந்தவனைக் கண்டு விலகிச் செல்லுவதற்குப் பதிலாக இரக்கத்தைப் பற்றி விவரிக்கும் கர்த்தருடைய வசனத்தின்படி அவர்கள் நடந்திருக்க வேண்டும். (உதாரணம் மீகா 6:8; இன்னும் பார்க்க மத் 9:13, 12:7, 23:23)

காயப்பட்டவனை அந்த ஆசாரியனும் லேவியனும் காப்பாற்றத் தவறியதற்கான காரணங்களை நாம் ஒருபோதும் அறியப்போவதில்லை. ஆலயத்தில் அவர்களுடைய ஆராதனைக்குச் செல்ல அவகாசமிருக்காது என்ற அச்சம் காரணமோ? அல்லது இரத்தக் காயப்பட்டவனைத் தொட்டால் தீட்டு என்று எண்ணினரோ? அல்லது காயப்பட்டவன் தங்கள் கருணைக்குக் கொஞ்சமும் தகுதியற்றவன் என்று கருதினரோ? அவர்கள் உதவியிருக்க முடியும், ஆனாலும் உதவவில்லை என்பது மட்டும் நமக்கு நிச்சயமாகத் தெரிகிறது.

மாறாக, காயப்பட்டவனின் தேவைகளைச் சந்திக்க இரண்டாவது மைல் வரை சென்று வந்தவன் அந்த சமாரியனே. ஏன்? உவமையின் வசனப் பகுதியில் அதற்கான விடை வெளிச்சம் போட்டுக்காட்டப் படுகிறது. அந்தப் பயணிகளின் எதிர்தாக்கத்தை வர்ணிக்க இயேசு உபயோகித்த வார்த்தைகள் ஒரு அமைப்பாக உள்ளன. அந்த மூன்று பேரும் காயப்பட்டவனைக் "கண்டனர்". (வ. 31,33) ஆசாரியனும் லேவியனும் காயப்பட்டவனைக் 'கண்டபோது' அவர்கள் இருவரும் வேறு பக்கமாக விலகிச் சென்றனர். (வ. 31-32) மாறாக, அந்த சமாரியன் காயப்பட்டவனைக் 'கண்டபோது' 'அவன் இரக்கமடைந்தான்' (வ. 33) மூன்று பேருமே காயப்பட்டவனைக் 'கண்ட' போதிலும், சமாரியன் மட்டுமே அவன்பேரில் இரக்கப்பட்டான். மீண்டும், . . ஏன்? ஏனென்றால், அந்த ஆசாரியனும் அந்த வேலியனும் காயப்பட்ட மனிதனை தங்கள் கண்களால் 'கண்டனர்'. ஆனால் சமாரியனோ அவனை தன்னுடைய இருதயத்தால் 'கண்டான்'.அந்த சமாரியனுடைய எதிர்தாக்கத்தைப் பற்றி இயேசு விவரித்தபோது பயன்படுத்திய அதே வார்த்தை அமைப்பு, வேறு இரண்டு பேரின் இரக்கச் செயல்களைப் பற்றிய புதிய ஏற்பாட்டில் விவரிக்கப்பட்டிருப்பதில் காண முடிகிறது.

அந்த இருவரில் ஒருவர் கிறிஸ்துவே; "கர்த்தர் அவனைப் பார்த்து, அவன் மேல்மனதுருகி. . ." (லூக். 7:13; பார்க்க மத். 9:36, 14:14) அடுத்த நபர், கெட்டகுமாரன் உவமையில் வரும் தகப்பன்; ". . . அவனுடைய தகப்பன் அவனைக் கண்டு, மனதுருகி. . ." (லூா 15 : 20) சந்தேகமின்றி அந்த தகப்பன் பிரதிநிதித்துவப்படுத்துவது தேவனையே.

இவ்வாறாக, அந்த தகப்பனிடத்திலும், மகனிடத்திலுமுள்ள தனிப்பட்ட குணங்களைப் போன்று, அந்த சமாரியனுடைய இருதயமும் இரக்கக் குணத்தால் நிறைந்திருந்தது. ஆனால் அந்த ஆசாரியனிடத்திலும், லேவியனிடத்திலும் கருணை என்பதே காணாமற்போயிருந்தது. ஏன் இந்த வேறுபாடு? இரக்கத்தைப் பெற்றுக்கொள்ளுவது எப்படிப்பட்ட காரியம் என்பதை, ஒருவேளை அந்த சமாரியன் அறிந்திருந்தான். ஆனால் அந்த ஆசாரியனும் லேவியனுமோ அதை ஒருபோதும் அறியக்கூடாதவர்களாக இருந்தனர். தன் வாழ்நாட்கள் முழுவதும் பல வழிகளிலும் சமுதாயத்தில் ஒடுக்கப்பட்டிருந்தான் அந்த சமாரியன் அந்த சாலை ஓரத்தில், அடிபட்டு காயப்பட்டுக்கிடந்த மனிதனைப் போலவே, உதவி தேவை என்பதின் பொருளை எளிதில் அறியக்கூடியவனாக இருந்தான்.

மறுபக்கத்திலோ, உதவியற்று, ஆதரவற்று கருணைக்காக ஏங்கித்தவித்த அந்த காயப்பட்டவனின் நிலையை, அந்த ஆசாரியனும் லேவியனும், ஒருபோதும் புரிந்து கொள்ளக் கூடாதவர்களாக இருந்தனர். கருணை காட்டப்படுவது அவர்களுக்குத் தேவையற்றதாக இருந்த காரணத்தால், பிறருடைய தேவைகளுக்கு உதவும் குணத்தையும் அவர்கள் பெற்றிருக்கவில்லை. (லூா 7:36-50, மத். 18:23-25)

அந்த துர்அதிர்ஷ்டமான, காயப்பட்ட மனிதனைக் காப்பாற்ற அந்த சமாரியன் வந்தது போல, நாமும் இன்று துன்பப்பட்டுக் கொண்டிருக்கும் பலருக்கும் உதவ முன்வரவேண்டும். வேதனைப்பட்டுக்கொண்டிருப்பவர்கள் நமது சமுதாயத்தில் பிராந்திய சபைகளில் இன்னும் நம்மைச் சுற்றி எல்லா இடங்களிலும் இருக்கின்றனர். சிறுவர், சிறுமிகள், வாலிபர்கள், மணவிலக்கு பெற்றோர், விதவைகள், அனாதைகள், மணமாகாத தாய்மார், குடிகாரர்கள் போதை அடிமைகள்யாரும்'உதவி, உதவி' என கூக்குரலிட்டுக் கொண்டிருக்கின்றனர். காரணமின்றி தாங்கள் தனிமைப்படுத்தப்பட்டிருப்பதாகவும், ஒதுக்கப்பட்டிருப்பதாகவும் உணருகின்றனர். உண்மையாக உறவுகளுக்காக அவர்கள் ஏங்குகின்றனர். வியாதிக்காரராகவும், மரணத்தின் வாயிலில் நிற்போராகவும் அவர்கள் காணப்படுகின்றனர். சில வேளைகளில் வாயிலிருந்து வரும் வார்த்தைகளாலும், இன்னும் சில சமயங்களில் அவர்களில் நொருங்குண்ட வாழ்வின் நிழல்கள் வழியாகவும், "என் பேரில் கருணை காட்டுங்கள்" என கூவிக் கொண்டிருக்கின்றனர். அவர்களுடைய குரல்கள் நமக்குக் கேட்கவில்லையா? நமது வெறும் கண்களால் அல்ல, நமது இருதயங்களால் அவர்களைக் காண்போமா? அவர்களுடைய வேண்டுகோள்களுக்கு செவிசாய்க்க நாம் எடுக்கும் முடிவு பலவித சவால்களை நமக்குக் கொண்டுவரும்.

இரக்கப்படுவது ஒரு அசௌகரியமான செயல், அந்த ஆசாரியன் லேவியன், சமாரியன் ஆகியோர் காயப்பட்ட மனிதனை சந்தித்தது 'தற்செயலாக' நடந்த ஒரு காரியம் (வ. 31) அது போன்றே கருணை காட்ட நமக்கு வரும் சந்தர்ப்பங்களும் கொஞ்சமும் எதிர்பாராதவைகளாக இருக்கும். இரக்கம் காட்ட நாம் முன் கூட்டியே நேரம் ஒதுக்கஇயலாது. ஏனெனில் வேதனைகளும், இதய நோய்களும் நேரம் குறிப்பிட்டுக்கொண்டு வருவதில்லை, கருணை காட்ட தாம் விரும்பினால், நமது நல்லசில திட்டங்களுக்குக் குறுக்கீடுகள் ஏற்படும் என்பதை நிச்சயமாக அறிந்து கொள்வீர்.

கருணை காட்டுவது விலைமிக்கது. சமாரியனுக்கு தனது பயணத்தின் ஒரு நாள் அதற்காக செலவழிந்ததோடு, கிட்டதட்ட இரண்டு நாட்கள் சம்பளப்பணம் வேறு செலவாயிற்று, கருணையின் விலையாக இயேசுவுக்கு அவருடைய உயிரே போயிற்று. கருணை காட்டும் போது நமது சக்தி, உணர்ச்சி, பணம், நேரம் ஆகிய யாவும் செலவாகும்.

இரக்கம் காட்டினால் செயல்பட வேண்டும். வேறு பக்கமாக விலகிப்போக, அந்த ஆசாரியனுக்கோ, லேவியனுக்கோ எந்த முயற்சியும் தேவைப்படவில்லை. சமாரியன், உதவியற்ற அந்த காயமுற்றவனைக் காப்பாற்ற நிறைய நேரத்தையும் பணத்தையும் செலவழிக்க வேண்டியிருந்தது. கருணைகாட்ட நாம் முடிவு செய்யும் வேளையில், பிறருடைய தேவைகளைச் சந்திக்க வேண்டிய நமது இதயப்பூர்வமான போராட்டத்தில் படுகுழியில் விழுந்து தத்தளிக்க வேண்டிய நிலையும் வரும் என்பது நிச்சயம்.

நமக்குக் கருணைக் கண்கள் இருக்கின்றனவா? இருதயத்திலிருந்து காணக்கூடிய அந்த பிஞ்சுக் கண்கள், இக்கட்டு, பெருமை ஆகியவற்றைத்தாண்டி, நம்மைப்போலவே இரக்கம் தேவைப்படும் பாதிக்கப்பட்ட மக்களைக் காணும் அந்த நீதியான கண்கள்; "என்னுடைய பிறன் யார்?" என்ற கேள்விக்கு முக்கியத்துவம் தராமல், "நான் ஒரு பிறனாக என்னை நிரூபித்துக் காட்டியிருக்கிறேனோ?"என்பதற்கு அதிக முக்கியத்துவம் தர நம்மை வலியுறுத்தும் அந்தக் கருணைக் கண்கள் - இக் கண்கள் என்னுடையவைகளா?

**Philp W. Thompson** **எஸ்.எஸ். ராஜன்.**

# HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRI LANKA

**HINDI** : Sunday 8:45 P.M. - 9.00 P.M. Tuesdays, Thursdays, and Fridays, 9.00 P.M. - 9.15 P.M. Speaker, Sunny David, Box 3815, New Delhi - 110049.

**ENGLISH** : Mondays, 9.00 P.M. - 9.15 P.M. Fridays, 7.45 P.M. - 8.00 P.M. Speaker, J.C. Choate, Box 3815, New Delhi - 110049.

**TELUGU** : Sundays, Tuesdays, Thursdays, Fridays, and Saturdays, 2.15 P.M. 2.30 P.M. Speaker, Joshua Gootam, Box 80, Kakinada - 533 001.

**TAMIL** : Sundays, Thursdays, 6.45 P.M. - 7.00 P.M. Tuesdays, 5.30 P.M. 5.45 P.M. Speaker, P.R. Swamy, Box 8405, Banagalore - 560 084.

**MALAYALAM** : Tuesdays and Fridays, 3.45 P.M. - 4.00 P.M. Speaker, P.K. Varghese, Sunny Meads Lane, Behind Sanskrit College, Trivandrum - 695 034.

**KANNADA** : Sundays, 1.45 P.M. 2.00 P.M. - 2.00 P.M. Speaker, Robert Rathnakar, Box 448, Banagalore - 6600 004.

Please write to these addresses for Bible correspondence course, magazines, and other Christian literature in your language.

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST.

Licenced to Post without Prepayment of Postage TN/ERD/W/0 PP/5
Posted at Erode HPO on 20, Aug 1994
AUG 1994, THIRUMARAI AASAAN Regd. No. TN/ERD/49

## பாட்டுப் புத்தகம் கிடைக்கும்

20 MM, ரெக்ஸின் அட்டை போட்டு, சிறந்த முறையில் பைண்டிங் செய்யப்பட்ட சுமார் 226 கிறிஸ்தவ பாடல்கள் அடங்கிய பாட்டுப் புத்தகங்கள் விற்பனைக்கு உள்ளன. தபால் செலவு உட்பட ஒரு பாட்டுப் புத்தகத்தின் விலை ரூ. 10/- மட்டுமே.

வேண்டுவோர் தொடர்பு கொள்க

**E.Z.S. ராஜநாயகம்**

கிறிஸ்துவின் சபை, தாராபுரம் ரோடு,

காங்கயம் 638 701

Published by Church of Christ Kangayam and
Printed at Jeeva Sakthi Press, Erode. Editor E.Z.S. Rajanayagam

PRINTED MATTER BOOK - POST

If undelivored Please return to
The Editor
THIRUMARAI AASAAN
POST BOX No. 27, KANGAYAM - 638 701